பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 14 ஞாயிற்றுக்கிழமை (31-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:276


# இடைக்கால நிர்வாக கட்டமைப்புக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும்

## சட்டவல்லுநர்கள் - புலிகளின் பரீஸ் கூட்டத்தில் வலியுறுத்து

பரீஸ்,ஓகஸ்ட்31

**வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக கட்டமைப்புக்கு காணி மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கான பொலிஸ் அதிகாரம் கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்று பரீஸில் இடம்பெற்ற புலிகளின் சட்ட வல்லுநர்களுடனான கூட்டத்தில் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.**

**இந்த விடயம் தொடர்பாக கூட்டத்தில் கலந்துகொண்ட சட்டவல்லுநர்கள் அதிகம் வலியுறுத்தியதை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றுக்கொண்டார்.**



பரீஸ் கூட்டம் தொடர்பாகத் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:-

காணி தொடர்பான அதிகாரம், சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் நடைமுறைபடுத்துவதற்குமான அதிகாரங்கள் அவசியமானவை என சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் அர்த்தபூர்வமான ஒரு சபையாக செயற்படுவதற்கு வாய்ப்பிருக்காது என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று மக்களுக்கு தேவையாக உள்ள புனர்நிர்மாண கட்டுமானங்களை செயற்படுத்தக்கூடிய அதிகாரத்தைக் கொண்ட ஒரு வரைவை நாம் சட்ட வல்லுநர்களின் ஆலோசனையைப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி பற்றி அயர்லாந்தில் மாநாடு

### தமிழ்ச்செல்வன் தலைமையில் புலிகள் குழு பங்குபற்றும்

சமாதான முன்முயற்சிகள் தொடர்பாக அயர்லாந்தில் சமாதான மாநாடு ஒன்று அடுத்தமாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு ஒன்று பங்கேற்கவிருக்கின்றது.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் ஏற்பாட்டில் இந்த மாநாடு இடம்பெறும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு சமர்ப்பித்த வரைவுக்கு பதில் வரைவு தயாரிக்கும் பணியில் விடுதலைப் புலிகள் தற்சமயம் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வரைவை அடுத்த மாத நடுப்பகுதியில் அரசிடம் சமர்ப்பித்த பின்னரே, அயர்லாந்தில் நடக்கும் மாநாட்டில் கலந்துகொள்ள தமிழ்ச்செல்வன் அங்கு செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்நாட்டு ஆட்சி முறை உட்பட பல விடயங்கள் குறித்து இக்குழுவினர் அந்நாட்டு அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதுடன் அங்கு நடக்கும் சமாதான மாநாட்டிலும் தமிழ்ச்செல்வன் கலந்துகொள்வார்.

இலங்கையில் அமையவிருக்கும் ஆட்சிமுறை குறித்து சர்வதேச சட்ட வல்லுநர்களுடனும் அவர் கலந்துரையாடுவார். (ம-3)

### கடந்த இரு நாள்களில் மட்டும்

## 3 வெவ்வேறு வீதி விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு; ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ். குடாநாட்டில் கடந்த இரு நாள்களில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு வீதி விபத்துக்களில் பெண் உட்பட இருவர் உயிரிழந்தனர்; ஒருவர் காயமடைந்தார்.

கோண்டாவில் வடக்கு, கலைவாணி வீதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை அங்கு மரணமானார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த கோண்டாவிலைச் சேர்ந்த மகாதேவன் தனரூபன் (வயது -19) என்பவரே மரணமானவராவார்.

இணுவில், ஸ்ரேசனடிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மற்றொரு விபத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த மாணிக்கம் தனலோகம் (வயது-50)என்ற பெண் காயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்து வருகையில் மரணமானார்.

இவர் சென்ற சைக்கிளை எரிபொருள் பவுஸர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. இவரை சைக்கிளில் ஏற்றிச்சென்ற இவரது பேரன் காயமேதுமின்றி உயிர்தப்பியுள்ளார்.

இதேவேளை -

(18ஆம் பக்கம் பார்க்க)

## தனித் தரப்பாக இல்லையேல் இனிமேல் பேச்சில் கலந்துகொள்ளப்போவதில்லை

### ஹக்கீம் தலைமையில் நடந்த முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஓக.31

எதிர்காலத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுக்களில் ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் தலைமையில் முஸ்லிம் தரப்பு தனியாகப் பங்கேற்க வாய்ப்புக் கிடைக்காவிட்டால் பேச்சுக்களில் கலந்துகொள்வதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீடம் முடிவு செய்துள்ளது.

கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய அதியுயர் பீடத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பம் முதல் இடம்பெற்ற பேச்சுக்களில் எமது கட்சியின் தலைவர் ஹக்கீம் கலந்துகொண்டார். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறியிருந்தார். அதன பயனாக 'சிரான்', பாதுகாப்புக் குழு, அரசியல் விவகாரக்குழு, ஆகியவற்றில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவமும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால், பின்னர் அந்தக் குழுக்கள் துரதிஷ்டவசமாக செயலிழந்தன.

பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிலான முஸ்லிம் குழுவை தனித்தரப்பாகப் பங்குபற்றச் செய்ய அரசும், புலிகளும், நோர்வேயும் இணக்கம் தெரிவித்திருந்தன. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான அமெரிக்க சட்டத்தை எதிர்த்து தமிழர் அமைப்புக்கள் மனு தாக்கல்

விடுதலைப் புலிகளுக்கு உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குவது சட்டவிரோதம் என்று அமெரிக்க அரசு இயற்றிய சட்டத்தை எதிர்த்து அங்குள்ள தமிழர் அமைப்புக்கள் வழக்குத் தொடர்ந்துள்ளன.

நியூயோர்க்கில் உள்ள உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும், மற்றும் சில அமெரிக்கத் தமிழ அமைப்புக்களும், வேறு சில அமைப்புக்களும் லொஸ்ஏஞ்சல்ஸ் சமஷ்டி நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளன.

அமெரிக்க வெளியுறவுச் செயலா கொலின் பவல், சட்டமா அதிபர் ஜோன் ஆஷ்கிரோப்ட் ஆகியோர் எதிர் மனுதாராகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் துருக்கியில் உள்ள குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி ஆகியவற்றின் சட்டப்படியான மனிதாபிமான நடவடிக்கைகளை ஆதரிக்க விரும்புகின்றோம் என்று மனு தாரர்கள் கூறியுள்ளனர். தனிநாடு கோரி போராடும் இவ்விரு அமைப்புக்களையும் பயங்கரவாத அமைப்புக்கள் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இந்த அமைப்புக்களை ஆதரிப்போர் தண்டிக்கப்படுவர் என்று அமெரிக்கச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது. இதை எதிர்த்தே இப்போது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு செப். 11ஆம் திகதி நியூயோர்க் மற்றும் வாஷிங்ரனில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலை அடுத்து இப்புதிய சட்டத்தை அமெரிக்க அரசு இயற்றியது. (ம)

## ஆயுதக் கொள்வனவு மோசடி: விசாரிக்கக் குழு வேண்டும்

### பொ.ஐ.முன்னணி பேச்சாளர் வலியுறுத்து

கொழும்பு,ஓக.31

கடற்படையின் அதிவேகப்படகுகளுக்கான ஆயுதங்களை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றை நியமிக்குமாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, அரசை கோரியுள்ளது.

முன்னணியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் சரத் அமுனுகம செய்தியாளர் மாநாட்டில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

நாட்டின் ஏனைய துறைகளையும் தாக்கி சீரழித்துள்ள ஊழல் தற்பொழுது பாதுகாப்புத் துறையையும் பாதித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் கடற்படைத்தளபதி றியர் அட்மிரல் தயாசந்தகிரியும் அண்மையில் இஸ்ரேல் சென்றிருந்த சமயம் அதிவேகப் படகுகளுக்கான ஆயுதங்களை

(18ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவிலில் சிறுமியை காணவில்லை!

யாழ்ப்பாணம்,ஓக.31

மிருசுவில் பகுதியில் கடைக்குச் சென்ற 14 வயதுச் சிறுமியைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சிறுமி வீட்டில் இருந்து கடைக்குச் சென்ற பின்னர் வீடு திரும்பவில்லை என்றும் -

தேடித்திரிந்த போதும் அவரைக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. - ஈ.பி.டி.பி. - இ.தொ.கா. அடங்கிய புதிய கூட்டணி விரைவில்!

### சுதந்திரக் கட்சி செயலாளர் தெரிவிப்பு

"ஜே.வி.பி. மற்றும் இ.தொ.கா., ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளைக் கொண்ட புதிய கூட்டணி ஒன்று ஒக்ரோபருக்குள் அமைக்கப்பட்டுவிடும். அதன்பின் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலில் வெற்றிபெற்று புத்தாண்டில் புதிய ஆட்சியை அமைப்போம்" -இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான பேச்சுக்கள் முடிவடையும் நிலையில் உள்ளன. பெரும்பாலும் இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒக்ரோபர் மாத ஆரம்பத்துக்கு முன் கைச்சாத்திடப்பட்டுவிடும் அதன்பின்னர் சிறுகட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகியவற்றுடன் ஒப்பந்தம் செய்யப்படும்.

ஒக்ரோபரில் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் ஒன்றை நடத்துவோம். அத்தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைப்போம். இதில் எந்தவிதமான இரண்டாம் கருத்துக்கும் இடமில்லை - என்றார் அவர். (ம-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.31

சுவிஸில் கடந்த வருடம் ஜூன் மாதம் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் மார்க்கண்டு கருணாநிதியின் வீர வணக்கக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மீசாலையில் இடம்பெறவுள்ளது.

மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து அவரது திருவுருவப்படம் ஊர்வலமாக மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு எடுத்துவரப்படும்.

அங்கு அஞ்சலி நிகழ்வுகளும் வீரவணக்கக்கூட்டமும் இடம்பெறும்.

யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளாதார சிறப்புப்பட்டதாரியான இவர் சுவிஸில் நீண்டகாலம் தங்கி உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கல்விச் சேவைப் பரீட்சைப் பொறுப்பாளராக பல காலம் பணியாற்றினார். இவரை தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நாட்டுப்பற்றாளர் என கௌரவித்திருந்தார். (ம-3)

## உதைபந்தாட்டம்

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி நாளை திங்கட்கிழமை தொடக்கம் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

போட்டிக்கான ஆட்டங்கள் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும்.

நாளை திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின விவரம் வருமாறு:-

15 வயது பிரிவு: ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி, எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

16 வயது பிரிவு: ஸ்கந்தவரோதயக்கல்லூரி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

18 வயது பிரிவு: கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை எதிர் மயிலணி சைவ வித்தியாசாலை.

16 வயது பிரிவு: ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை எதிர் இணுவில் மத்திய கல்லூரி. (ஒ-152)

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 13,15 வயதுப் பிரிவுகளின் மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்று நாளை திங்கட்கிழமை முதல் ஐந்து தினங்கள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்ப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம், யாழ் பாடசாலைகள் விளையாட்டுக்குழு ஆகியன இணைந்து இந்தப் பயிற்சி முகாமை நடத்தவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் ஒவ்வொரு பிரிவுகளிலும் தலா இரு வீரர்களை இந்தப் பயிற்சிக்கு அனுப்புமாறு யாழ். உடற்கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

இப்பயிற்சியில் பங்குபற்றவரும் மாணவர்கள் உடை, பாதணி, பந்து என்பவற்றை எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-3)

## கரப்பந்தாட்டம்

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்டரீதியான மின்னொளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றும் நாளையும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**இன்று**

☆ இரவு 7 மணிக்கு - சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க. எதிர் அச்சுவேலி விக்கினேஸ்வரா வி.க.

☆ 7.30 மணி - ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. எதிர் கெருடாவில் அண்ணா வி.க.

**நாளை**

☆ இரவு 7 மணி - அரியாலை ஐ.வி.க. எதிர் தோப்பு வாலிபர் வி.க.

☆ 7.30 மணி-காங்கேசன்துறை ஜவிக எதிர் புத்தூர் கலைமதி. வி.க. (ம-3)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

கிளிநொச்சி அழகியல் கலாமன்ற நடன ஆசிரியை செல்வி சிவப்பிரகாசம் சிவகுமாரியின் மாணவிகளான செல்வி சிவசுப்பிரமணியம் சுதர்சினி, செல்வி சிவபாதம் பாகேஸ்வரி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை 7மணிக்கு கிளிநொச்சி அழகியல் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

### மணல் அகழப்படுவதால் ஏற்படும்

# சூழல் பாதிப்பினைத் தடுப்பதற்கு மணற்காட்டில் பாதுகாப்பு அணை

யாழ்ப்பாணம்,ஓக.31

மணற்காட்டுப் பகுதியில் மணல் அகழ்வதால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புக்களை நிவர்த்தி செய்ய கடற்கரைக்கும் மணல் அள்ளும் பகுதிகளுக்கும் இடையில பாதுகாப்பு அணை அமைக்கும் படி கனியவள நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளனர்.

இந்தப் பகுதியிலிருந்து கட்டுப்பாடு இல்லாத வகையில் மணல் அகழப்படுவதால் சூழல் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுவதாக யாழ். அரச அதிபருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதையடுத்து மணல் அகழ்வு தொடர்பாக ஆய்வுசெய்ய கனியவள நிபுணர்களை அரச அதிபர் அழைத்திருந்தார்.

கனியவள நிபுணர்கள் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் தமது முழுமையான அறிக்கையை அரச அதிபரிடம் சமர்ப்பித்து சில சிபாரிசுகளை வழங்கியுள்ளனர்.

அந்த சிபாரிசுகள் வருமாறு:-

☆ மண் அகழ்வு மூலம் சூழல் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க மணல் எடுக்கும் பிரதேசத்துக்கும் கடற்பகுதிக்கும் இடையில் 2 மீற்றர் உயரத்துக்குப் பாதுகாப்பு அணை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

☆ கண்ணாடி தயாரிக்கத் தேவையான சிலிக்கன் மண் இந்தப் பிரதேசத்தில் காணப்படுகிறது. அந்த மண் காணப்படும் பகுதியை அகழ்வுக்கு உட்படுத்தாமல் அதைப் பாதுகாக்க வேண்டும்.

இந்த ஆய்வு அறிக்கை கிடைத்த பின் அப்பகுதியிலிருந்து மணல் அகழ அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன் விநியோகப் பொறுப்பு வடமராட்சி கிழக்கு அபிவிருத்திக் குழுவிடம் யாழ். அரச அதிபரால் ஒப்படைக்கப்பட்டுளளது. (ம-3)

### திருட முயன்ற சமயம்

## கூரையில் இருந்து தவறி கிணற்றில் வீழ்ந்த இளைஞன் பொலீஸாரால் கைது!

அச்சுவேலி, இடைக்காட்டில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் திருடமுயன்றதாகக் கருதப்படும் நபர் ஒருவர் கூரையில் இருந்து கால் இடறிக்கிணற்றில் வீழ்ந்த பின்னர் அச்சுவேலிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் நீளக்காற்சட்டை, சப்பாத்து அணிந்து 'டிப்ரொப்'பாகக் காணப்பட்ட இளைஞர் ஒருவரே இந்தத் திருட்டு முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுக்கூரையில் ஏறிய இவர் அங்கிருந்த ஓடுகளை அப்புறப்படுத்த முனைந்த சமயம் கால் இடறிநிலை குலைந்து அருகில் உள்ள கிணற்றில் வீழ்நதிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

கிணற்றில் வீழ்ந்த அந்த இளைஞன் தன்னுடன் வந்த சகாக்களை கூவி அழைத்துள்ளார். இந்தச் சத்தத்தில் விழித்துக்கொண்ட குடும்பத்தினரும் அயலவர்களும் பார்த்தபோது அந்த இளைஞன் கிணற்றில் இருந்து கத்திக் கொண்டிருந்தார்.

வீட்டுக்காரர்களைக் கண்டதும் தான் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்றும் தன்னைக் காப்பாற்றுங்கள் என்றும் அவர் குரல் கொடுத்துள்ளார்.

அந்த இளைஞனுடன் வந்ததாகக் கருதப்படும் நபர்கள் அவரைக் காப்பாற்றாமல் ஓடித்தப்பிவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான தகவல் அச்சுவேலிப் பொலீஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. பொலீஸார் வந்து கிணற்றில் வைத்து அந்த இளைஞனை கைது செய்தனர்.

வீட்டின் அயலில் இருந்து திருடா கோஷ்டியால் கைவிடப்பட்டதாகக் கருதப்படும் கைபிடியுடன் கூடிய 'சைக்கிள் செயின்', உலக்கை போன்ற பொருள்களைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

பிரஸ்தாப இளைஞன் திருட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு சில தினங்களுக்கு முன்பே விடுதலையானவர் எனப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரஸ்தாப இளைஞனுடன் வந்ததாகக் கருதப்படும் ஏனையோரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலீஸார் முடுக்கி விட்டுள்ளனர். (ம-3-11)

## தேசிய மெய்வன்மைப் போட்டிகளில் யாழ். மாவட்ட வீரர்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

கொழும்பு, சுகததாஸ விளையாட்டரங்கில் அடுத்தமாதம் 25ஆம் திகதி முதல் இடம்பெறவிருக்கும் தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் யாழ். மாவட்ட வீரர்களும் பங்குபற்றவிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகளின் தனிநபர் நிகழ்வுகளின் முதல் நான்கு இடங்களைப் பெற்ற வீரர்கள் தேசியப் போட்டியில் பங்குபற்றமுடியும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றவிருக்கும் போட்டியாளர்களில் ஆண்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணி முதலும் -

பெண்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9 மணி முதலும் - கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுளளன. (ம-3)

# பல்கலை. ஊழியர் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது

### கல்வி அமைச்சருடனான பேச்சின் பின் முடிவு

யாழ்ப்பாணம்,ஓக.31

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் கடந்த 12ஆம் திகதி முதல் மேற்கொண்டுவந்த வேலை நிறுத்தப்போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் நாளை திங்கட்கிழமை முதல் கடமைக்கு திரும்பவுள்ளனர். இத்தகவலை அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளன யாழ். பல்கலைக்கழக இணைப்பாளர் சி. கலாராஜ் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல்கலைக்கழகங்களின் மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஆர்.எம். மெண்டிஸ், 3ஆம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம், உயர் கல்வி அமைச்சர் கருணாசேனா கொடித்துவக்கு மற்றும் அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற் சம்மேளனக் கூட்டு முன்னணியின் அதிகாரிகள், அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்விசாரா ஊழியர்கள் முன்வைத்த சம்பள உயர்வு தொடர்பாக அங்கு நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. பல்வேறு பட்ட அளவுகளில் சம்பளம் பெறும் 4 ஆயிரத்து 500 ஊழியர்களுக்கு ஏற்கனவே பெற்றுக்கொடுக்கத் தீர்மானிக்கப்பட்ட ஆயிரம் ரூபாவுக்கு மேலதிகமாக 150 ரூபாவை வழங்க இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவானது செப்ரெம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை வழங்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு கடமைக்குத் திரும்புவதற்கு அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை - யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்.

நேற்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் எட்டப்பட்ட உடன்பாடு தொடர்பான விவரம் அங்கு தெரிவிக்கப்படும். கல்விசாரா ஊழியர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்புவது தொடர்பான அறிவித்தலும் அங்கு வைத்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. (ம-9-6)

## மருந்துக்கலவையாளர் இல்லாமையால் சிரமம்

சண்டிலிப்பாய்,ஓக.31

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் மருந்துக்கலவையாளருக்கு பற்றாக்குறை நிலவி வருவதால் தமக்குரிய மருந்துகளை பெறுவதற்கு நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

மூன்று மருந்தாளர்கள் மட்டுமே இங்கு பணிபுரிந்து வருவதாகவும், ஆளணி ஒதுக்கீட்டில் ஐந்து மருந்துக் கலவையாளர்களுக்கு இடமிருந்தும் தற்போது இங்கு மருந்துக்கலவையாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என்றும் தெரியவருகிறது. (ம-135)



'உதயன்' பத்திரிகை நிறுவன ஆதரவில் நடக்கும் இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு இங்கிருந்து தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு உதயன் கேட்போர் கூடத்தில் நேற்றும் நேற்றுமுன்தினமும் இடம்பெற்றது. இன்றும் தொடர்ந்து நடைபெறும். கருத்தரங்கில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

## தனிநாயகம் அடிகள் நினைவுக் கூட்டங்கள்

தவத்திரு தனிநாயக அடிகளாரின் 90ஆவது பிறந்த தினத்தையும், 23 ஆவது நினைவு தினத்தையும் முன்னிட்டு இன்று இரு கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் காலை 8.30 மணிக்கும் -

யாழ் சென்சாள்ஸ் மகாவித்தியாலயத்தின அதிபர் திருமதி பி.எவ. சின்னத்துரை தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கும் இந்தக் கூட்டங்கள் நடைபெறும்.

இவ்விரு கூட்டங்களிலும் தமிழீழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் மா.க.ஈழவேந்தன் கலந்துகொண்டு உரையாற்றுவார்.(எ-10)

## வைரஸ் காய்ச்சலால் சிறுவர்கள் பாதிப்பு

தென்மராட்சி,ஓக.31

பளைப் பிரதேசத்தில் வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளே இக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறவரும் குழந்தைகள் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு தினமும் சிகிச்சைக்காக கொண்டு வரப்படுகின்றனர்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பளை ஆஸ்பத்திரியில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் - கூறப்பட்டது. (எ-117)

## மதுபான விற்பனை நிலையங்களை மூடும் நேரம் அறிவிப்பு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களை இரவு 8.30 மணியுடன் மூடுமாறு சாவகச்சேரி பொலீஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இரவு வேளைகளில் மதுபோதையில் செல்வோரினால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டினையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலீஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எச். றோகித தெரிவித்தார். (எ-117)

## 4 லட்சம் தென்னைகள் குடாநாட்டில் அழிவு

கடந்த இரண்டுதசாப்த கால யுத்தநடவடிக்கைகளின் போது யாழ் குடாநாட்டில 4லட்சத்து 27ஆயிரத்து 163 தென்னை மரங்கள் அழிவுற்றிருப்பதாக ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தெங்கு அபிவிருத்திச்சபை மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல் தெரியவந்திருக்கின்றது.

குடாநாட்டில் 125 கிராமசேவையாளர் பிரிவில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 47ஆயிரத்து 286 தென்னைமரங்களும், முல்லைத்தீவு மாவடடத்தில் 2லட்சத்து ஆயிரத்து 421தென்னை மரங்களும் அழிவடைந்துள்ளதாகவும் அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பளை மற்றும் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது படையினரால் பயன்படுத்தப்பட்ட பல்குழல் பிரங்கித் தாக்குதல்களினாலேயே ஒப்பீட்டளவில் மிகவும் அதிகமான தென்னை மரங்கள் அழிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## சாரணத் தலைவர் கூட்டம்

காங்கேசன்துறை மாவட்டச் சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சண்டிலிப்பாய், சீரணியில் இயங்கிவரும் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

## ஆங்கில ஆசிரியர் செயலமர்வு


தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் மூன்றாம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-117)

# ரஷ்ய அணுசக்தி நீர்மூழ்கி 'பரண்ட்' கடலில் மூழ்கியது!

ரஷ்ய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று ஆர்க்டிக்கில் 'பரண்ட்' கடலில் 10 பணியாளர்களுடன் மூழ்கியது.

இக்கப்பலின் பணியாளர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் -

மேலும் இருவருடைய சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் - ரஷ்யக் கடற்படையின் வடக்குப் படையணியின் பேச்சாளர் தெரி



வித்தார். கடலில் மூழ்கிய நீர்மூழ்கிக் கப்பலின் மற்றைய பணியாளர்களை உயிருடன் மீட்கும் சாத்தியம் வெகு குறைவாகவே உள்ளதாக ரஷ்யக் கடற்படைத் தளபதி விக்ர் கிரா சென்கோ தெரிவித்தார்.

இந்த அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலில் ஆயுதங்கள் எவையும் இருக்கவில்லை என்றும் - அதிலிருந்த அணுசக்தி சாதனங்கள் இரண்டும் 1989ஆம் ஆண்டிலேயே மூடப்பட்டுவிட்டதாகவும் -

அதனால் நீர்மூழ்கி மூழ்கியதில் ஆபத்து ஏதுமில்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். கில்டின் தீவிலிருந்து 3 மையில் தூரத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 4 மணியளவில் இந்த நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கியுள்ளது.

இதேவேளை, இந்த நீர்மூழ்கிக் கப்பல் உடைக்கப்படுவதற்காக கொண்டு செல்லப்பட்டபோதே நீரில் மூழ்கியதாக உறுதி செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக ரஷ்யக் கடற்படை விசாரணை நடத்தியவருகிறது.

2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ரஷ்யாவின் குர்ஸ்க் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் 'பரணட்' கடலில் மூழ்கியதில் அதிலிருந்த 118 பணியாளர்களும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# கணனி வைரஸ் பரப்பியதாக 18 வயது இளைஞர் கைதானார்



கணனி வைரஸைப் பரப்பி லட்சக்கணக்கான கணனிகளை முடக்கிய குற்றச்சாட்டின் பேரில் 18 வயது இளைஞர் ஒருவரை அமெரிக்கப் பொலீஸார் கைதுசெய்தனர்.

மினசோட்டாவைச் சேர்ந்த ஜெவ்ரிலபார்ஸன் என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவராவார்.

எம்.எஸ்.பிளாஸ்ட் என்று பெயரிடப்பட்ட கணனி வைரஸை பரப்பியதாக கைது செய்யப்பட்ட இந்த இளைஞர் குறிப்பிட்ட கணனி வைரஸை உருவாக்கவில்லை என்றும் -

கணனி வைரஸைப் பரப்பி ஏராளமான கணனிகளை முடக்கியதே அவர் செய்த குற்றமென்றும் - பொலீஸார் தெரிவித்தனர். இதேசமயம் குறிப்பிட்ட கணனி வைரஸை உருவாக்கியவரைக் கண்டு பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடத்தும் பொலீஸார் பார்ஸனின் வீட்டிலிருந்து 19 கணனிகளைக் கைப்பற்றி சோதனையிட்டு வருகின்றனர். குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டால் பார்ஸனுக்கு 10 ஆண்டுகள் சிறைவாசத்துடன் 2 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்கடொலர்கள் வரை அபராதமும் விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

# லண்டன் நகரில் திடீர் மின்தடை!

தெற்கு லண்டன் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இலங்கை நேரப்படி இரவு 11.15 மணிக்கு திடீர் மின்தடை ஏற்பட்டது. இதனால் பொதுமக்களிடையே குழப்பமும் பீதியும் நிலவியது.

மின்தடையால் 5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். மின்தடை ஏற்பட்டது உள்ளூர் நேரப்படி மாலை 6.15 மணி என்பதால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. வெளியில் பிரயாணம் மேற்கொண்டிருந்த 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாயினர்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு மின்சாரம் படிப்படியாக வரத் தொடங்கியது. தெற்கு லண்டன் பகுதிக்கு மின் விநியோகம் செய்யும் தேசியத் தொகுப்பில் ஏற்பட்ட கோளாறே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

சம்பவம் குறித்து உடனடி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளேன். பயங்கரவாதிகள் வேலையாக இது இருக்க வாய்ப்பில்லை என்று லண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டோன் தெரிவித்தார்.

# விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு ரஷ்ய விண்கலம் புறப்பட்டது

விண்வெளியில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச ஆய்வு நிலையத்திற்குத் தேவையான பொருள்களை ஏற்றிக்கொண்டு ரஷ்ய விண்கலம் வெள்ளிக்கிழமை காலை புறப்பட்டது.

'புராக்டஸ் எம் 48' எனப்படும் அந்த விண்கலம் கஜகஸ்தானில் உள்ள பைகோனூர் ஏவுதளத்திலிருந்து புறப்பட்டது. சோவியத் யூனியனில் இருந்து கஜயகஸ்தான், தனிநாடாகப் பிரிந்தது. எனவே, அங்குள்ள ஏவுதளத்தை ரஷ்யா குத்தகைக்கு எடுத்துள்ளது.

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில், தற்போது அமெரிக்காவைச் சேர்ந்த எட்வர்ட் லு, ரஷ்யாவைச் சேர்ந்த யூரி மலென்செங்கோ ஆகியோர் ஏப்ரல் 28 ஆம் திகதியிலிருந்து தங்கியிருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர், பிரணவாயு, அறிவியல் ஆய்வுக் கருவிகள், செல்போன்கள் போன்றவை இந்த விண்கலத்தில் கொண்டு செல்லப்படுகின்றன.

இது தவிர 2.6 மெட்ரிக் தொன் எரிபொருளும் கொண்டு செல்லப்படுகிறது. இன்று காலை 7.45 மணிக்கு இந்த விண்கலம் விண்வெளி நிலையத்தைச் சென்றடையும் என்று கூறப்பட்டது.

அமெரிக்க விண்கலம் கொலம்பியா, கடந்த பெப்ரவரியில் விண்வெளி ஆய்வு நிலையத்திற்குச் சென்று திரும்பி வந்த போது வெடித்துச் சிதறியது. அதில் இருந்த இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 பேர் இறந்தனர். இதையடுத்து, தற்போது ரஷ்ய விண்கலம் மட்டுமே சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்றுவருகிறது.



காஸாவில் இஸ்ரேலிய டாங்கி

# அதிக சம்பளம் வாங்கிய நடிகை

உலகிலேயே மிக அதிக சம்பளம் வாங்கிய நடிகை என்ற பெருமையைப் பெற்றுள்ளார் கமரூன் டயஸ். இத்தகவலை கின்னஸ் உலக சாதனை நிறுவனம் வெளியிட்டுள்ளது. கின்னஸ் சாதனைகள் புத்தகத்தில் டயஸ் பெயர் இடம் பெற்றுள்ளது. 2001 ஆம் ஆண்டில் டயஸின் வருவாய் 26.7 மில்லியன் பவுண்ட்கள் (ரூ.378 கோடி), இவருக்கு முன் அந்த கௌரவத்தைப் பெற்றிருந்த நடிகை ஜீலியாரொபர்ட்ஸ்.

2000ஆம் ஆண்டு வருவாய் அடிப்படையில் ஜீலியாரொபர்ட்ஸ் ஈட்டிய வருவாய் 13.4 மில்லியன் பவுண்ட்கள் (187 கோடி), அதன்படி 2003, 2002இல் அதிக சம்பளம் பெற்ற நடிகையாகத் திகழ்ந்தார் ரொபர்ட்ஸ். நடிகர்களிடையே 2001இல் உலகிலேயே மிக அதிக சம்பளம் பெற்ற நடிகராகத் திகழ்கிறார் அடம் சாண்ட்லர். இவரது வருவாய் 31.3 மில்லியன் பவுண்ட்கள் (ரூபா438 கோடி), 2000ஆம் ஆண்டில் 46.8 மில்லியன் பவுண்ட்கள் (ரூபா735 கோடி), வருவாய் ஈட்டி அதிக சம்பளம் வாங்கிய நடிகர் என்ற கௌரவத்தை புருஸ் வில்லிக்கு 2003 இல் அளித்தது கின்னஸ்.

# பலஸ்தீனர் சுட்டதில் இஸ்ரேலியர் மரணம்!

மேற்குக்கரை நகரான ரமழாவில் பலஸ்தீனத் துப்பாக்கிதாரி சுட்டதில் இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டார்; அவரது மனைவி படுகாயமடைந்தார். இஸ்ரேலியக் குடியேறிகள் அதிகம் பயன்படுத்தும் வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இஸ்ரேலியக் ஹெலிகள் காஸாப்பகுதியில் நடத்திய தாக்குதலில் பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பான ஹமாஸின் பிரதான உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்ட ஒரு மணித்தியாலயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதேசமயம், ஜெனின் நகரில் இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கும் இடையே வீதிகளில் சண்டைகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

# நாடு உருப்படவேண்டுமானால் சினிமாவை ஒழிக்கவேண்டும்!

## டாக்டர் ராமதாஸ் சீற்றம்

மதுரை,ஒக.31

இந்தியாவில் 5 ஆண்டுகளுக்கு சினிமா மற்றும் தொலைக்காட்சிக்கு தடை போட்டுவிட்டால் நாடு உருப்படும் என்கிறார் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ்.

திண்டுக்கல்லில் பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் மாவட்ட மாநாடு நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு டாக்டர் ராமதாஸ் பேசியதாவது:-

சினிமா மற்றும் தொலைக்காட்சி பெண்களை ஆபாசமாகச் சித்தரிக்கின்றன. மாணவர்கள் பாடங்களை ஒழுங்காகப் படிக்கின்றார்களோ இல்லையோ சினிமா பாடல்களை ஒப்பிக்கின்றனர். நாடு உருப்பட வேண்டுமென்றால் 5 ஆண்டுகளுக்கு சினிமா மற்றும் தொலைக்காட்சிக்கு தடைபோடவேண்டும்.

பெண்குழந்தைகள்தான் பெற்றோர்களை கடைசிவரை வைத்து காப்பாற்றுகின்றனர். எனவே, பெண் சிசுக்கொலை கூடாது. கூலிவேலையில் ஆண்களுக்கு ரூபா100 ஊதியமாகவும் அதே பணிக்கு பெண் தொழிலாளர்களுக்கு ரூபா 30 ஊதியமாகவும் வழங்கப்படுகின்றது. ஆண்களுக்கு நிகராக பெண்களும் வேலை பார்க்கின்றனர். எனவே, அவர்களுக்கு சம கூலி வழங்கப்படவேண்டும் என்றார்.

# வில்லனுக்கு அரசியல்வாதி பெயர்; 2 திரையரங்குகள் மீது தாக்குதல்!

## இந்தியாவில் சம்பவம்

பாட்னா,ஒக.31

இந்தியாவின் பீகார் மாநிலம் திரையரங்குகளை ராஷ்ட்ரீய ஜனதா தள தொண்டர்கள் தாக்கி சேதப்படுத்தினர்.

நடிகர் பிரகாஷ்ராஜ் தயாரித்த 'கங்காஜல்' படத்தின் வில்லனுக்கு பீகார் முன்னாள் முதல்வர் லாலுவின் மைத்துனரும் அரசியல்வாதியுமான சாது யாதாவின் பெயரை வைத்ததால் ஆத்திரமுற்ற தொண்டர்கள், அப்படம் திரையிடப்படவிருந்த வீணா மற்றும் அப்சரா திரையரங்குகளைத் தாக்கினர்.

இந்த இரு திரையரங்குகளுக்கு வெளியே ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை கிழித்தெறிந்தனர். சாது யாதாவின் செல்வாக்குக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் சினிமா வில்லனுக்கு அவர் பெயரை வைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து, சர்ச்சைக்குத் தீர்வு காணப்படும் வரை இப்படத்தைத் திரையிடப்போவதில்லை என திரையரங்குகளின் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.



# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வைத்தியரின் சொந்தப் பாவனையிலுள்ள நல்ல நிலையிலுள்ள 50 ஸ்ரீ Toyota Hiace விற்பனைக்கு உண்டு. (சகல ஆவணங்களுடனும்) தொடர்பு: தார்சீசியஸ், அழகு, 237, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (பிலிப் நேர்ஸிங் ஹோமுக்கு முன்னால்) T.P. 589608. (22033)

பொங்கோ றம் (றிபிள்) புதியது விற்பனைக்கு உண்டு. இசைக்குழு மற்றும் தேவ சபைகளுக்கு உகந்தது. தொடர்பு: எ.அருள்நாதன், 'கவிதாலயா' செக் பொயின்ற் ஒழுங்கை, சுழிபுரம். (சி-20870)

Sony பாவித்த 20"-21" T.Vகள் விற்பனைக்கு உண்டு. மொடல்கள் 2199(Japan), 2197, 2060. தொடர்பு: S.மகேஸ்வரன், கே.கே.எஸ். வீதி, (சிறுவர் பூங்கா முன்பாக) மல்லாகம். (22051)

## காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, ஆண்டாவளவு 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: P.S.L. நாதன் இல.111, செம்மணி றோட், நல்லூர் (வெயிலுகந்த பிள்ளையார் கோயிலுக்கு முன்னால்) (22031)

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகர எல்லைக்குள் 13/4 பரப்புக் காணியில் 4 அறைகளும் சாப்பாட்டறை, ஹோல், கராஜ், குளியலறை உள்ளடக்கிய சகல வசதிகளும கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 143, பிரதான வீதி. யாழ்ப்பாணம். T.P. 222 5569 (22019)

## வீடு வாடகைக்கு

திருக்குடும்பக் கன்னியர்மடம், மெயின் வீதிக்கு அடுத்த கதீற்றல் வீதியில் (முமென்டோவுக்கு (Movi mondo) பக்கத்தில்) மேல்மாடி வீடு நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். மருத்துவபீட மாணவர்களுககும், தகுதியானவர்களுக்கும் அறைகள் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: T.P. 021 222 5687.(22068)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Great Dane நாய்க்குட்டிகள விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21994)

நான்கு மாதங்கள் நிரம்பிய Greate Dane ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. Parvo, Dhl, Arv தடுப்பூசிகள் ஏற்றப்பட்டது. தொடர்பு: 221, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்னால்) (22037)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 160/- மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1. மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். 2. பொன்னாலை வீதி, விதானையார் வளவு, மானிப்பாய். (21611)

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (21920)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம் தொடர்பு: ரவி, தபால் அலுவலகம் அருகில், ரவி உணவகம், தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. 24 மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். (சி-29860)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் 01.09.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: (நல்லூர் வீடியோ செனரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(21995)

## ஆங்கில வகுப்பு

ஆங்கிலம் (சா/த) December 2003 Paper Class ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் கற்பிக்கப்படும். Visiting Possible. புதிய இலக்கம் 33,பலாலி வீதி, (இலுப்பையடிச் சந்தி தெற்கு) யாழ்ப்பாணம். (21646)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1964இல் பிறந்த, விசாக நட்சத்திரம், 4 இல் சூரியன், செவ்வாய், உயரம் 5' 5", கனடா சிற்றிசன் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. தொடர்பு: (1) கல்யாணமாலை திருமணசேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைபந்தி, யாழ்பபாணம். (2) 67/A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13. T.P. 338162. (22066)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1965இல் பிறந்த, உயரம் 5'3", திருவோண நட்சத்திரம், ஆஸ்திரேலியா சிற்றிசன் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: (1)கல்யாணமாலை திருமணசேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2) 67/A, ஆட்டுப பட்டித்தெரு, கொழும்பு-13, T.P. 338162. (22067)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் பிரஜாவுரிமையுடைய, 1961ஆம் ஆண்டு பிறந்த, குடி, தீய பழக்கங்கள் அற்ற மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட அழகிய மண மகளைப் பெற்றோர் தேடுகின்றனர். மணமகள் புகைப்படம் மற்றும் ஜாதகக்குறிப்புக்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 2006, மே/பா உதயன். (22009)

## மணமகன் தேவை

யாழ். இந்து குடும்பம், 1973 ஆம் ஆண்டு பிறந்த, பாவம் குறைந்த, குற்றமற்ற பட்டதாரி ஆசிரியைக்கு உத்தியோகம் பார்க்கும் மணமகன் உள்நாட்டில் தேவை. தரகரும் தொடர்பு கொள்ளலாம். குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள. இல. 2007, மே/பா உதயன். (22050)

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் தொழில புரியும் 1975ஆம் ஆண்டு பிறந்த 5' 4" உயரமுடைய மணமகளுக்கு 33 வயதிற்குட்பட்ட குடி, தீய பழக்கங்களற்ற நிரந்தர தொழில்புரியும் மணமகனைப பெற்றோர் தேடுகின்றனர். மணமகன் ஜாதகக்குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விள.இல. 2006, மே/பா. உதயன். (22010)

## ஒகன் வகுப்புகள்

நீங்கள் விரும்பும் பழைய புதிய மற்றும் கிறிஸ்தவப் பாடல்களை நீங்களே ஓகன் வாத்தியத்தில் சுயமாக இசைக்க கற்றுக்கொள்ளுங்கள். வீட்டுக்கு வந்தும் வகுப்புகள் எடுக்கப்படும். தொடர்பு-எ.அருள்நாதன், செக்பொயின்ற் ஒழுங்கை, சுழிபுரம். (c/29869)

## தேவை

SPD 20 ROLAND பாட் (தாள வாத்தியக்கருவி) புதியது தேவை. விற்க விரும்புவோர் விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2009, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (C/29868)

## தவறிவிட்டது

இல.163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பீற்றர் ரெறென்ஸ் ராஜ்மோகன் என்பவருடைய தே.அ.அ. (இல. 712550917V) 25.08.2003 திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (22035)

## விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
**A.குமார்,**
*676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.*
*தொ.பேசி இல.222 6722*
(22048)

## வேலையாள் தேவை

எமது ஹோட்டலுக்கு வரவேறபாளர், றூம்போய், சமையலாளர் (மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள் சமைக்கத் தெரிந்தவர்), வெயிற்றர் ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு:
**ஹோட்டல் சுவர்க்கா,**
33, சூசைப்பிள்ளையார் குளம் வீதி,
வவுனியா.
☎ 024 2221291.
(21-11-18) (22056)

## 31ஆம் நாள் நினைவு நிகழ்வு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 | | 01 |
| 06 | | 08 |
| 1961 | | 2003 |



**அமரர்**
**வைத்திலிங்கம் வன்னியசிங்கம் (கிளி)**
(பயிரிக்கூடல் - காரைநகர்)

*ஆண்டுகள் பல ஆயிற்றே உம் திருமுகம் கண்டு*
*இங்கு வருவீர்கள் எனக் காத்திருந்தோம் ~ ஆனால்*
*உங்கள் மறைவுச் செய்திதான் வந்தது!*
*நாம் செய்த பாவம் உங்களைக் காண முடியவில்லை!*

*அன்பார்ந்த மைத்துனரே! ஆதரவாய் இருந்தீரே!*
*உமது புன்சிரிப்பு முகத்தை இனி எங்கு காண்போம்?*

*பாசமுள்ள சகோதரனே! உமது அன்பு கலந்த*
*நேசமான இனிய வார்த்தைகளை இனி எப்போது கேட்போம்?*

*பண்புள்ள மாமாவே! உங்கள் பாசம் நிறைந்த திருமுகத்தை*
*காணாமல் தவிக்கின்றோமே இங்கு! என் செய்வோம் நாம்.*

அன்னாரின் நினைவு நிகழ்வுகள் யாவும் இன்று பிரான்ஸில் நடைபெறுகின்றன. அவர் மறைந்து 31ஆம் நாளான இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இங்கு "சோதிமாளிகை", நீலிப்பந்தனை, காரைநகரிலுள்ள இல்லத்தில் நடைபெறுகின்றது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்.**

"சோதிமாளிகை",
நீலிப்பந்தனை,
காரைநகர். (22059)(21-11-18)

(22059) (26-21-11-18)

## வேலையாளர்கள் தேவை

சமையலுக்கு ஒரு பெண்ணும், மூடைகள் பறிப்பதற்கு ஓர் ஆளும் பூந்தோட்ட வேலைக்கு ஓர் ஆளும் தேவை. கூடிய சம்பளம் தரப்படும்.

**க.தனபாலசிங்கம்**
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
19, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(22047)(21-11-18)



## யப்பான் சைக்கிள்

☆ கியர், ஓட்டோமற்றிக் லைட், கப் பிறேக் போன்ற விசேட அம்சங்களுடன் பல மொடல்களில் யப்பான் சைக்கிள்.
☆ போலியான பளபளப்புக்களை நம்பி ஏமாறாமல் குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதும் சுலபமான ஓட்டத்திற்கு நீண்ட காலம் செலவின்றி பாவிக்கக்கூடியதுமான ஒரு சைக்கிளை வாங்குவதற்கு வாருங்கள்.
★ **விலை ரூபா 3500/- இலிருந்து........**

**சித்திவிநாயகர் யப்பான் சைக்கிள் (B) பசார்**

இல. 631A, கே.கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(26-11-18) (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்) (22058)

## மணமகள் தேவை

1962ஆம் ஆண்டு பிறந்த, விவாகரத்துப் பெற்ற (முதல் மனைவி, 2பிள்ளைகளும் வெளிநாட்டில்), தற்போது இலங்கையில் நிரந்தரமாக வசிக்கும், சொந்தமாகத் தொழில்புரியும், ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

எந்தச் சமயத்தவரும் விண்ணப்பிக்கலாம். பெண்ணுடைய வயது 28 இற்கும் 36இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். சீதனம் தேவையில்லை.

புகைப்படம் அனுப்பிவைக்கவும். விண்ணப்பம் நிராகரிக்கப்படின் படம் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
விளம்பர இல.2008,
(21-11-18) மே/பா உதயன், யாழ்ப்பாணம். (22055)

## 31ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**

எமது உடன் பிறவா சகோதரர்களான சுரேஸ்குமார், சதீஸ்குமார், ரமேஸ்குமார் அவர்களின் தந்தையார் **அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை** அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ஜெயா, ரூபன், றீகன்
(நியூசோபிதா நகைமாடம்)
(C/29030)(21-11-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது குடும்ப நண்பர் **திரு. எஸ்.பி. அருள்செல்வம்**
*(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)*
அவர்களுடைய அன்பு மாமியார்
**திருமதி முத்துத்தம்பி தங்கரத்தினம்** (சரஸ்வதி)
*அவர்கள் கடந்த 27.08.2003 அன்று காலமானார். அவரின் பிரிவினால் துயருறும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

நண்பர்கள்
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
(22043) (26-21-11-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி வைதேகி கணநாதன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சரஸ்வதி கணநாதன்**
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

யா/புங்குடுதீவு
ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்,
புங்குடுதீவு. -
(22024)(21-18-11)

உதயன்

## தென்தமிழீழ நிலைமையால் இந்தியப் போக்கில் மாற்றம்?

கிழக்கிலங்கையில் - தென் தமிழீழத்தில் - இடம்பெற்றுவரும் சில சம்பவங்கள், தொடர் நடவடிக்கைகள் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் மட்டுமல்லாமல் அதன் வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் உறவுகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தப்போகின்றன என்பதற்குக் கட்டியம் கூறும் தகவல்கள், செய்திகள் இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் மெல்லமெல்லக் கசிந்து வருகின்றன.

கிழக்கிலங்கையில், துளிர்விடத் தொடங்கியிருக்கும் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களுக்கு பாகிஸ்தான் மற்றும் பங்களாதேசம் போன்ற நாடுகளிலிருந்து ஊட்ட சக்தி அளிக்கப்பட்டுவருவது பற்றிய ஊகத் தகவல்கள் இப்போது உறுதிப்படுத்தப்படும் நிலைமை உருவாகிவருகின்றது.

பாகிஸ்தான், பங்களாதேசம் மற்றும் சவூதி போன்ற நாடுகளைத் தலைமையகமாகக் கொண்ட பல நிறுவனங்கள், அமைப்புகள் அண்மைக்காலத்தில் கிழக்கிலங்கையில் தமது கால்களை ஊன்றி செயற்பாட்டை விரிவுபடுத்தத் தொடங்கியிருக்கின்றன. அரசு சார்பற்ற தொண்டர் அமைப்புகள் என்ற போர்வையில் பணியாற்றத் தொடங்கியிருக்கும் இந்த நிறுவனங்கள், கிழக்கில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான உள்ளூர்வாசிகளுக்கு நிதி மற்றும் உதவிகளை வழங்கி அவர்களை வெளிநாட்டுப் பயிற்சி என்ற பெயரில் இலங்கையிலிருந்து குறிப்பிட்ட வேறு சில முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பி வருகின்றன.

இவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி எத்தகையது? முஸ்லிம் அடிப்படைவாதம், தீவிரவாதத்தோடு இந்த வெளிநாட்டுப் பயிற்சிகளுக்குத் தொடர்பேதும் உண்டா? வெளியில் முஸ்லிம் மிதவாதத் தலைவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் உள்ளூர் பிரமுகர்களுக்கும் இத்தகைய தொண்டர் நிறுவனங்கள் என்ற பெயரில் செயற்படும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகளுக்கும் உள்ள தொடர்புகள் என்ன? தென்னிலங்கையில் இருந்தவாறு இந்தச் செயற்பாடுகளுக்குக் களம் அமைத்து, பின்னணியில் இணைப்புப் பாலமாகச் செயற்பட்டு வரும் பிரமுகர்கள் யார்? - இது போன்ற கேள்விகள் நமது நாட்டு பாதுகாப்புப் பிரிவினரைவிட, நமது அயல்நாடான இந்தியாவின் பாதுகாப்பு உயர் பீடத்தில்தான் அதிகளவு பரபரப்புக்கும் சிரத்தைக்கும் உள்ளாகியிருக்கின்றன என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கிழக்கிலங்கையில் சில முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களின் உறுப்பினர்களுக்கு ஆங்காங்கே ஆயுதப்பயிற்சி அளிக்கப்படுவதாக ஏற்கனவே வெளியான செய்திகளுக்கு மேலதிகமாகவே, அத்தகைய இயக்கச் செயற்பாடுகளுக்கு வெளிநாட்டு ஊக்குவிப்பும் பின்னணியும் நேரடியாக இருப்பது பற்றிய தகவலும், வெளிநாட்டுப் பயிற்சிகள் பற்றிய உளவுச் செய்திகளும் கிடைக்கத் தொடங்கியிருக்கின்றன.

இத்தகவல்கள், செய்திகள் புதுடில்லியையும் கொழும்பில் உள்ள அதன் தூதரகத்தையும் அதிக கவலைக்குள் ஆழ்த்தியிருப்பதையும் உணர முடிகிறது.

அதுமட்டுமல்ல. கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதம் ஊடுருவும் நிலைமை இலங்கை தொடர்பாக - குறிப்பாக ஈழத் தமிழர் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் தொடர்பாக - இந்தியாவின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வரக்கூடும். அதற்கான ஏது நிலைகள் அதிகம் தென்படுகின்றன.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து, புதுடில்லியில் ஒரு வாரத்துக்கு மேல் முகாமிட்டு, புலிகளுக்கு எதிராகப் பெரும் பிரசாரப் போர் நடத்திய - ஜனாதிபதி குமாரதுங்கவின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரின் - முயற்சி அங்கு பலனளிக்காமல் போனதற்கு கிழக்கு நிலைமை தொடர்பான இந்தியாவின் கரிசனைக் கணிப்பீடு காரணமாக இருக்கலாம்.

பாகிஸ்தான் எல்லைப் புறத்திலும், பங்களாதேச எல்லைப் புறத்திலும் முஸ்லிம் அடிப்படைவாதத்தையும் சில இடங்களில் முஸ்லிம் தீவிரவாதத்தையும் எதிர்கொள்ளும் இந்தியாவிற்கு அதன் தென்முனையில் உள்ள இலங்கைத் தீவிலும் முஸ்லிம் தீவிரவாதம் காலூன்றுவது விருப்புக்குரியதாக இருக்காது என்பது நிச்சயம்.

# மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு தொடர்பான விவரங்கள்

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள விசேட கூடத்தில் வைத்து வழங்கப்படுமென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட நாள்களில் காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீட்பு நிதிக் கடன்களை மீளப் பெறத் தெரிவுசெய்யப்பட்டோர் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக மீளளிப்பைப் பெறும் தினங்கள் வருமாறு:-

எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்டவர்களுக்கும் -

எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை மானிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, காரைநகர், வேலணை, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்டவர்களுக்கும் -

எதிர்வரும் 18ஆம் திகதி கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, சாவகச்சேரி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்டவர்களுக்கும் - முகமாலையில் மீட்பு நிதிக் கடன் மீளளிக்கப்படும்.

இதேவேளை, வன்னிப் பிரதேசத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி மீட்பு நிதிக் கடன் மீளளிக்கப்படும் இடங்களும், மீளளிப்புப் பெறுவோரின் பகுதிகளும் நேரமும் வருமாறு:-

பூநகரி, நல்லூர் மகா வித்தியாலயம் - நல்லூர், பூநகரி காலை 8.30 மணி.

முழங்காவில் மகா வித்தியாலயம் - முழங்காவில் முற்பகல் 9.45 மணி.

விடத்தல்தீவு றோ.க. பாடசாலை - விடத்தல்தீவு முற்பகல் 11.00 மணி.

கறுக்காய்க்குளம் அ.த.க. பாடசாலை - கறுக்காய்க்குளம் நண்பகல் 12.00 மணி.

மல்லாவி மத்திய கல்லூரி - மல்லாவி பிற்பகல் 3.30 மணி.

அக்கராயன் மகா வித்தியாலயம் - அக்கராயன் மாலை 5.00 மணி.

இதேபோன்று எதிர்வரும் 21ஆம் திகதி மீளளிப்பு வழங்குதல் குறித்த விவரங்கள் வருமாறு:-

மாங்குளம் மகா வித்தியாலயம் - மாங்குளம் காலை 8.00 மணி.

வருவாய்ப் பகுதிச் செயலகம் - புளியங்குளம் காலை 8.30 மணி.

நெடுங்கேணி மகா வித்தியாலயம் - நெடுங்கேணி முற்பகல் 9.30 மணி.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் - ஒட்டுசுட்டான் முற்பகல் 10.15 மணி.

வித்தியானந்தாக் கல்லூரி - தண்ணீரூற்று - முற்பகல் 11.30 மணி.

ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் - புதுக்குடியிருப்பு பிற்பகல் 12.15 மணி.

விசுவமடு மகா வித்தியாலயம் - விசுவமடு 1.30 மணி.

கிளி.மத்திய கல்லூரி - கிளிநொச்சி பிற்பகல் 2.45 மணி.

# மீட்பு நிதிக்கடன் சான்றிதழை தவறவிட்டோர் கவனத்துக்கு!

கிளிநொச்சி,ஓக.31

தமிழீழ மீட்பு நிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர் மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை அறிய விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, மீட்பு நிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர் பட்டியலில் தமது பெயர் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்த அணுகவேண்டிய இடம், நாள் மற்றும் நேரம் குறித்து பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அப்பட்டியல் வருமாறு:-

எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் அரசியல்துறைச் செயலகம் காலை 8.00 மணிமுதல் 9.30 மணிவரை.

சண்டிலிப்பாய் அரசியல்துறைச் செயலகம் முற்பகல் 10.00 - மணிமுதல் 11.00 மணிவரை.

சுன்னாகம் அரசியல்துறைச் செயலகம் நண்பகல் 12.00 - மணிமுதல் 1.30 மணிவரை.

நீர்வேலி அர்சியல்துறைச் செயலகம் பிற்பகல் 2.00 - மணிமுதல் 3.30 மணிவரை.

எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை வல்வெட்டித்துறை அரசியல்துறைச் செயலகம் காலை 8.00 மணிமுதல் 9.30 மணிவரை.

தம்பசிட்டி அரசியல்துறைச் செயலகம் முற்பகல் 10.00 மணிமுதல் 11.30 மணிவரை.

கரவெட்டி அரசியல்துறைச் செயலகம் பிற்பகல் 12.30 மணிமுதல் 2.30 மணிவரை.

எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை - கைதடி அரசியல்துறைச் செயலகம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரை.

சங்கத்தானை அரசியல்துறைச் செயலகம் முற்பகல் 10.00 மணிமுதல் 11.30 மணிவரை.

நல்லூர் அரசியல்துறைச் செயலகம் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணிவரை.

எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை - வேலணை அரசியல்துறைச் செயலகம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரை.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் முற்பகல் 11.00 மணி முதல் 2.00 மணிவரை.

எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை - கிளிநொச்சி மத்திய கல்லூரி பிற்பகல் 2.45 மணிமுதல் 4.00 மணிவரை.

# அனலைதீவு, எழுவைதீவில் படகுச் சேவைகள் சீர்குலைவு!

## படகோட்டிகளின் கருத்து முரண்பாடு காரணமாம்

ஊர்காவற்றுறை,ஓக.31

அனலைதீவு, எழுவைதீவு போன்ற பகுதிகளுக்கான பயணிகள் படகு சேவையில் ஈடுபடும் படகோட்டிகளிடையே நிலவும் கருத்து முரண்பாடு காரணமாகப் படகுச் சேவைகள் மேலும் சீர்குலைந்துள்ளன.

படகோட்டிகளின் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அனலைதீவில் இருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் படகு, எழுவைதீவு சென்று அங்கு ஏறி, இறங்க வேண்டிய பயணிகளுக்காக தரித்த பின்பே மீண்டும் ஊர்காவற்றுறை நோக்கிச் செல்கிறது.

இச்சமயத்தில், எழுவைதீவில் இருந்து காலை 10.30 மணிக்கு புறப்படவேண்டிய படகு, அனலைதீவில் இருந்து வரும் படகு எழுவைதீவு வருவதற்குள் அங்குள்ள பயணிகளை ஏற்றிச் சென்றுவிடுவதாகக் காரணம் காட்டி எழுவைதீவிற்குச் செல்லாமல் நேராக அனலைதீவில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிப் பயணமாகிறது.

இந்தப் படகே பின்னர் காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து புறப்பட்டு, எழுவைதீவு, அனலைதீவு நயினாதீவு சென்று பின்னர் அங்கிருந்து பிற்பகல் 2.30 மணிக்கு புறப்பட்டு மேற்படி பகுதிகளூடாக மாலை 4 மணிக்கு ஊர்காவற்றுறை வந்தடைகிறது.

இதற்கிடையில் காலை 8.30 மணிக்கு எழுவைதீவிலிருந்துவரும் படகு ஊர்காவற்றுறையில் பயணிகளை இறக்கிவிட்டு உடன் திரும்பிச் செல்கையில் ஊர்காவற்றுறையில் இருந்து எழுவைதீவு செல்லும் பயணிகளை ஏற்றிச் சென்றுவிடுவதாகவும் -

இதனால், காலை 9.30 மணிக்கு புறப்படும் படகு, எழுவைதீவு செல்லாமல் நேராக அனலைதீவு ஊடாக நயினாதீவு சென்று மீண்டும் திரும்பும்போது எழுவைதீவு செல்லாமல் அனலைதீவு ஊடாக ஊர்கவற்றுறை சென்றடைகிறது.

இதனால், எழுவைதீவைச் சேர்ந்த பயணி ஒருவர் அனலைதீவு, நயினாதீவு செல்வதாயின் ஊர்காவற்றுறை வந்தே செல்லவேண்டியுள்ளது. அதேபோல் நயினாதீவு, அனலைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த பயணி ஒருவர் நெடுந்தீவு செல்வதாயின் ஊர்காவற்றுறை வந்தே செல்லவேண்டியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் அதிக அளவு பணச் செலவையும் பெரும் சிரமங்களையும் தாம் எதிர்நோக்கிவருவதாக பயணிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (எ-16)

# வடக்கு - கிழக்கு பகுதிகளில் முதியோர் வாரத்தை சிறப்பாகக் கொண்டாட விரிவான ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.31

வடக்கு - கிழக்கில் உள்ள 72 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இவ்வருடம் முதியோர் வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் மாகாண சமூக நலத்துறைப் பணிப்பாளர் என்.ஆர்.ரஞ்சினி மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதிவரை முதியோர் தினம் கொண்டாடப்படவுள்ளது. பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பன இதற்கான சகல ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

முதியோர் வாரத்தை முன்னிட்டு பிரதேச ரீதியாக முதியோர்களைக் கௌரவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கௌரவிப்புத் தொடர்பாக விசேட முன்மொழிவுகள் ஏதும் இருப்பின் அதனை, பிரதேச செயலாளர்கள், உதவி அரச அதிபர்கள், பொது அமைப்புக்கள், பொதுச்சேவை நிறுவனங்களின் உதவியுடன் செயற்படுத்தவேண்டும் என்றும் - சமூக நலத்துறைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-185)

### நாளை

ஆவணி 15
திங்கட்கிழமை
(01.09.2003)
திதி : பஞ்சமி
பிற்பகல் 2.37 வரை
நட்சத்திரம : சுவாதி
பின்னிரவு 12.18 வரை
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 12.05 - 1.35
ராகுகாலம்: 7.35-9.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உரையாடல் என்பது அறிவு பூர்வமான பரிவர்த்தனை. தர்க்கம் செய்வது அறியாமையின் பரிவர்த்தனை.




64
வருடகால நம்பிக்கை

# வெளிநாடு செல்லும்போது எம்மிடமும் சொல்லிச் செல்லுங்கள்!

வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிச் செல்லும் அனைவருக்கும் எமது பரிசு. ரூபா.200/- ஆரம்ப வைப்புடன் 'எதர திலின' சேமிப்புக் கணக்கு.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதியப்பட்ட சான்றிதழை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் சமர்ப்பிப்பதன் மூலம் இந்த **'எதர திலின'** கணக்கினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**'எதர திலின'** கணக்கிற்கு ஏனைய கணக்குகளைக் காட்டிலும் அதிக வட்டி வழங்கப்படும்.

இக் கணக்கு இலங்கை வங்கியின் 64வது வருடத்தையொட்டி செயற்படுத்தப்படுகின்றது.

வெளிநாடு செல்லும்போது உறவினர் நண்பர்களிடம் சொல்வதுபோல அருகிலுள்ள இலங்கை வங்கியிடமும் சொல்லிச் செல்லுங்கள்.

**எதர திலின**

இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளை அல்லது தலைமை காரியாலயத்தில் பண்டார, சரத் உடன் தொடர்பு கொள்ளுங்கள் 2447831, 2346841.
முகாமையாளர், விற்பனை மேம்படுத்தல் சர்வதேசப்பிரிவு, இலங்கை வங்கி, தலைமைக் காரியாலயம், கொழும்பு 01.

PHOENIX O&M 1844

# வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் ஆவணிச் சதுர்த்தி

**விநாயகப் பெருமானுக்குரிய சிறப்புமிக்க விரதங்களில் ஒன்றான 'ஆவணிச் சதுர்த்தி' இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**



விநாயகப்பெருமான் உடற் பலத்துக்கும், ஞானச்செழுமைக்கும் அடையாளமான கடவுள். எந்தக் காரியத்துக்கும் இந்த இரண்டும் தேவை. விக்னேஸ்வரருடைய அனுக்கிரகம் இருந்தால் இப்பூவுலகில் எந்தக் காரியமும் தடையின்றி நடக்கும். தடைகளை நீக்கி பூரண அனுக்கிரகம் செய்கின்ற தெய்வம் பிள்ளையார்.

'ஓங்கார ரூபாய நம' என ஓத வினை அகலும். ஓங்கு புகழ் பெருகும். 'வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்' என்பார்கள்.

*'நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலை ஞானங்*
*கற்குஞ் சரக்கன்று காண்'* - என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். யானை முகத்தைப் போலும் முகத்தையுடைய விநாயகப் பெருமானை மன, மொழி, மெய்களினால் துதிப்போமானால், அவர் எம்மீது திருவருள் பொழிந்து காட்டுவார்.

ஆவணி மாதத்தில் வளர்பிறையில் வரும் சதுர்த்தியே விநாயக சதுர்த்தி எனப்படும். ஒவ்வொரு மாதத்திலும் வரும் சதுர்த்தி விரதங்களில் தலையாயது ஆவணிச் சதுர்த்தி.

ஆவணிச் சதுர்த்தியன்று விரதமிருப்போர் விநாயகப் பெருமானுக்கு பூஜைகள் செய்து பகல் முழுவதும் உணவு உண்ணாமல் இருந்து இரவில் பால்பழம் உண்ணலாம்.

ஆவணிச் சதுர்த்தியன்று விநாயகப்பெருமானுக்கு சிறப்பான நிவேதனமாக தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழங்கள், (நாவல், விளாம்பழம், வாழைப்பழம், வெள்ளரிப்பழம்) கரும்பு, அப்பம், மோதகம் ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்ற எண்ணிக்கையில் படைத்தல் நன்று.

*'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்துனக்கு நான் தருவேன் நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா'* என்று விநாயகப் பெருமானிடம் ஔவைப்பிராட்டி வேண்டினார். அவ்வாறே, இறைவனுக்கு விருப்பமான எதைக்கொடுக்கிறீர்களோ அப்போது இறைவன் உங்களுக்குத் தேவையானதை அளிப்பார். இந்த உண்மையை விளக்குவது விநாயகர் தத்துவம்.

**- நந்தன் -**

சுயநலத்தைத் தியாகம் செய்து, பிறர் நலன் நாடி ஆன்மீக வாழ்க்கை நடததவேண்டும். அதன்மூலம் தெய்வீகத்தை உணர்ந்துகொள்ளவேண்டும். இதுவே நிஜமான விநாயகர் தத்துவம்.

விநாயகப் பெருமானுடைய ஆவணிச் சதுர்த்தியன்று மிகச் சிறப்பான அம்சம் இருபத்தொரு புஷ்பம், இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு அறுகம்புல் கொண்டு தனித்தனியாக அர்ச்சனை செய்தல் அல்லது மாசிப்பச்சை, கையாத்கரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி, வன்னி, அலரி, காட்டாத்தி, எருக்கு, மருது, விஷ்ணு கரந்தை, மாதுளை, தேவதாரு, மரு, நெல்லி, சிறுசண்பகம், செந்தாளி, பாதிரி, அறுகு என்று இருபத்தொரு பத்திரங்களைக் கொண்டு அர்ச்சிப்பதை 'புட்பவிதி' கூறுகிறது.

ஆவணிச் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து முருகன் சூரனை எதிர்த்து வெற்றி பெற்றார். கர்த்தமன் என்னும் அரசன் இழந்த அரசை மீளப் பெற்றான். நளன் அனுஷ்டித்து சிவப்பேறு பெற்றான் சந்திராங்கதன் இருமை இன்பமும் பெற்றார். மன்மதன், ஆதிசேடன் இன்பமுற்றனர்.

விநாயகர் அறிவு வடிவானவர். "அறிவென்னும் கணபதியை அகத்துக் கொள்வோம்." என்பது ஆன்றோர் வாக்கு. புருவ நடுவிலிருந்து உள்நோக்கி ஒருகோடும், உச்சிலிருந்து கீழ்நோக்கி ஒரு கோடும் இட்டால் அந்த இரண்டும் சந்திக்கும் இடம் அறிவுக்கு நிறைகலமாகும். மயங்கியிருக்கின்ற ஒருவனைத் தட்டுவது போல் ஞானவிநாயகரிடம் சென்று மயங்கிய அறிவைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு சிரசில் குட்டிக் கொள்கிறோம்.

உடம்பு வளைந்து நிமிர்வதால் சுறுசுறுப்பு ஏற்படும். சுறுசுறுப்பு உள்ளவனுக்கு அறிவில் தெளிவு ஏற்படும். ஆகவே, பிள்ளையார் திருமுன் குட்டிக் கொண்டு, தோப்புக்கரணம் போடுகின்ற வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருகிறது.

வெவ்வினைகள் வேரறுக்க வேண்டின், அற்புதகீர்த்தி வேண்டின், ஆனந்த வாழ்க்கை வேண்டின், நற்பொருள் குவிதல் வேண்டின், நலமெலாம் பெருக வேண்டின், கற்பக மூர்த்தியாம் விநாயகப் பெருமானை ஆவணிச்சதுர்த்தியில் உள்ளன்போடு ஆசாரவிதிப்படி வழிபட்டு எல்லாப் பேறுகளையும் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.




வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2003 - 2004 வருட புதிய நிர்வாக சபை பதவியேற்பு வைபவம் அண்மையில் சித்தன்கேணியிலுள்ள கழகத்தின் தொழிற்பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வலயத் தலைவர் லயன் டாக்டர் சி.சதாசிவம் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நுளம்பு வலையை அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம். ,கழகச் செயலாளர் லயன் வி.ஆர்.கனகராசா மற்றும் இதர கழக பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)

## பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதற்காக
# கிராம அலுவலர் சம்பளத்தை பிடித்தம் செய்யவேண்டாம்!
### பிரதேச செயலர்களுக்குப் பணிப்பு

கொக்குவில்,ஓக.31

கிராம அலுவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தினத்தை சம்பளமற்ற விடுமுறையாகக் கணிக்க வேண்டாம்.

- இவ்வாறு யாழ். அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

கிராம அலுவலர் ஒருவர் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டமையை ஆட்சேபித்து கிராம சேவையாளர்கள் கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி தத்தமது பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற பகுதிநாள் கூட்டத்தைப் பகிஷ்கரித்திருந்தனர். இத்தினத்தையே சம்பளமற்ற விடுமுறையாகக் கணிக்கவேண்டாமென யாழ். அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு அறிவித்துள்ளார். இது குறித்து பிரதேச செயலர்களுக்கு அரச அதிபர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற பகுதிநாள் கூட்டத்துக்கு சமுகமளிக்காத கிராம அலுவர்களுக்கு உரித்துடைய விடுமுறை நாள்களிலிருந்து ஒரு நாள் விடுமுறையைக் கழிக்கவும், பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒரு தொழிற் சங்க நடவடிக்கை என்பதால் அத்தினத்தை சம்பளமற்ற விடுமுறையாகக் கணிக்கமுடியாது.

இனிவருங்காலங்களில் பகுதி நாள் கூட்டத்துக்கு முன்னனுமதி பெறாமல் சமுகமளிக்காத கிராம அலுவலர்களுக்கு அந்நாளைச் சம்பளமற்ற விடுமுறையாகக் கணித்து அத்தினங்களுக்கான வேதனத் தொகையை மீளப்பெற்றுக்கொள்ளவும். அத்தகைய கிராம அலுவலர்களுடைய பெயர் விவரங்களை ஒவ்வொரு மாத முடிவிலும் அனுப்பி வைக்கவும் - என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி கிராம அலுவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பை அடுத்து, அத்தினத்தைச் சம்பளமற்ற விடுமுறையாகக் கணிக்குமாறு அரச அதிபர் முன்னர் பிரதேச செயலர்களைக் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-76)



சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நிர்வாக அலுவலக மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது, அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சோ.அமிர்தலிங்கம் நாடாவைவெட்டி கட்டடத்தைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.யோகராசா, யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரீ.சிவபாதம், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)

## படையினரால் கைதாகிப் பின்னர்
# காணாமற்போனோரின் குடும்ப சிறுவர்களுக்கு செஞ்சிலுவை உதவி

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

இதன்போது 1996ஆம், 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பாகப் பல விடயங்கள் பற்றிக் கேட்டறிந்து கொண்ட செஞ்சிலுவைக் குழுவினர் தம்மாலான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளனர் எனப் பாதுகாவலர் சங்கம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காணாமற்போனோரின் குடும்பங்களில் வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களில் கல்வி கற்கின்ற சிறுவர்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்வதாகவும் செஞ்சிவைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களில் கல்வி கற்கின்ற சிறுவர்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்படவுள்ளதால், குறிப்பிட்ட குடும்ப உறுப்பினர்கள், காணாமற்போனோர் சங்க நிர்வாகிகள், அன்னையர் முன்னணி நிர்வாகிகள் ஆகியோரை நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னையர் முன்னணித் தலைவியின் இல்லத்துக்கு வருகை தருமாறு காணாமற்போனோர் சங்கச் செயலாளர் எஸ். சற்குணம் கேட்டுள்ளார். (எ-10)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றோருக்கு எதிரான வழக்கு தங்காலை நீதிமன்றில் விசாரணை

### பலர் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள்; விசாரணையின்போது இருவர் மயங்கி வீழ்ந்தனர்!

கொழும்பு,ஓக.31

ஒருநாள் இரவு 10 மணியளவில் எனக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் குடாவெல துறைமுகத்திற்கு 5 பேர் அடங்கிய பொலீஸ் குழுவுடன் நான் சென்றேன். அங்கே படகுகளுக்கிடையில் நாங்கள் மறைந்திருந்தோம். எங்களை விட இன்னும் இரு பொலீஸ் குழுக்களும் துறைமுகத்தின் சுற்றுப்புறத்தில் பதுங்கியிருந்தன. சுமார் 5 மணித்தியாலங்கள் நாங்கள் இவ்விதம் காத்திருந்த பின்னர், வெளிச்சம் அணைக்கப்பட்ட நிலையில் 3 வான்கள் துறைமுகத்திற்கு வந்தன.

- இவ்வாறு தங்காலை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கொன்றில் சாட்சியமளித்த தங்காலை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப இன்ஸ்பெகடர் பி.ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி தங்காலை குடாவெல மீன்பிடித் துறை முகத்திலிருந்து ட்றோலர் ஒன்றில் இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முயன்றார்கள் என்று 41பேர்மீது தங்காலை பொலீஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் அதிகமானோர் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் ஆவர்.

தங்காலை நீதிவான் சுனில் அபயசிங்க முன்னிலையில் கடந்த புதன் கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 22 எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி என்ஶ்ரீகாந்தாவும் ஏனைய 19 எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி ராசிக்ஷருக்கும் ஆஜராகியிருந்தனர்.

பொலீஸ் தரப்பில் அரச சட்டவாதி குமாரரட்ணம் சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

தொடர்ந்து சாட்சியமளிக்கையில் சப் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ தெரிவித்ததாவது:-

துறைமுகத்திற்கு வந்த 3 வான்களில் இருந்தும் பலர் இறங்கினர். அவர்களிடம் பிரயாணப்பொருள்கள் இருந்தன. அவர்கள் அவசரம் அவசரமாக ஓடிச்சென்று துறைமுகத்திலிருந்த சென்.ஜோன்ஸ் என்னும் ட்றோலரில் ஏற முயன்றனர்.

நாங்கள் அப்போது திடீரென வெளியில் பாய்ந்து அந்த ட்றோலரைச் சுற்றி வளைத்தோம். ட்றோலரில் இருந்தோருக்கும் அதில் ஏறமுயன்று கொண்டிருந்தவர்களுக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து அனைவரையும் கைதுசெய்தோம். இவர்கள் அனைவரும் ஆண்கள் ஆவர்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

சப் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ சாட்சியமளித்துக் கொண்டிருக்கையில் பிற்பகல் 4 மணிக்கு மேலாகி விட்டதால் வழக்கு விசாரணை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கையில் எதிரிகள் இருவர் நீதிமன்றில் அடுத்தடுத்து மயங்கி விழுந்தனர். நீதிவானின் உத்தரவின் பேரில், அவர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே உடனடியாகத் தூக்கிச் செல்லப்பட்டு அவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டது.

அந்நேரத்தில், எதிர்த்தரப்புச் சட்டத்தரணியின் சம்மதத்துடன் அவ்விரு எதிரிகளும் இல்லாமலேயே விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

சிறிது நேரத்தின் பின்னர் மயங்கி விழுந்த இருவரும் நீதிமன்றத்திற்குள் வந்து வாங்கில் அமர்ந்தபடி விசாரணையில் கலந்துகொண்டனர்.

41 எதிரிகளில் ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒருவரைத்தவிர ஏனையோர் கடந்த 6 மாத காலமாகத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணைமனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 8ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெறும். (எ)

## இலவச மருத்துவ சேவை

குருநகர்,ஓக.31

ஊர்காவற்றுறை நகரத்துக்கான கிராமசேவகரின் (ஜே/49) அலுவலகத்தில் பிரதி புதன்கிழமை தோறும் பொதுமக்களுக்கான இலவச மருத்துவசேவை நடைபெற்று வருகின்றது.

கியுமெடிக்கா மருத்துவ சேவைப் பிரிவினர் இச்சேவையை வழங்கி வருகிறார்கள். (எ-51)

## உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.31

வலி.வடக்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் பரிசளிப்பு மற்றும் கலைவிழாவும் இடம்பெறும்.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-3)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**


யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(சி-29243)

**ஜே.கே. அரம் மற்றும் டிரில் பிட்ஸ்**



உலகளாவிய ரீதியில் அரங்களின் பாரிய உற்பத்தியாளர்கள்

இலங்கையில் ஏக முகவர்

**ஜெனரல் இக்விப்மன்ட்ஸ் லிமிடட்**

316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799
பக்ஸ்: 2434637

## முதலாம் வருட நினைவுகள்

தோற்றம் 24 - 12 - 1978



மறைவு 31 - 08 - 2002

**அமரர் இராசன் சிவகுமார் (சிவன்)**

சிவனே அவனியில் நீ மறைந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் இதயத்தில் நிறைந்துள்ளாய்
செப்பமுடன் வாழ்ந்து வளமூட்டி - எ...
வாழவைப்பாய் என்று எண்ணியிருந்தும் - இடையிலே
வீதிதனிலே விதி வந்து வினையானது இன்னும்
உம் பிரிவால் தவிக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

பிள்ளையார் கோவிலடி,
தொண்டமனாறு. (21956) (25-21-15-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி அமிர்தகாந்தி மாசிலாமணி**

அன்போடு அரவணைத்து ஆதரவு மொழி பேசி
பண்போடு வாழ்ந்து பார் போற்ற விளங்கினீர்!
இன்றோடு முப்பத்தொரு நாளும் ஆயிற்றோ தாயே!
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம். (21-19-15)

எமது இல்லத்தரசியின் அந்தியேட்டிக்கிரியை நிகழ்வுகள் இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியம் நாளை (01.09.2003) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

14, நாவலடி லேன்,
கேசாவில் பிள்ளையார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (21936)

- பிரிவால் கலங்கி நிற்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**கியுபிட் போர்ட் KUPID FORT**
(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

விசாரணைகள் யாழ்.நகரில்
தொலைபேசி 222- 3191



காலம் காலமாக
இளம் சருமம் பெற
கிரீம், லோஷன்
உபயோகியுங்கள், இல்லையேல்
மெடிமிக்ஸில் குளியுங்கள்.

காலங்காலமாய் சருமத்தை
இளமையாக, பொலிவாக,
ஆரோக்கியமாக
வைத்திருப்பதற்கான இரகசியம்
ஆயுர்வேதத்திலுள்ளது.
இதே ஃபார்முலா மெடிமிக்ஸ்
ஆயுர்வேதிக் சோப்பில் உள்ளது.
இது 18 சக்திவாய்ந்த மூலிகைகள்
மற்றும் தேங்காய் எண்ணெயின்
நற்குணங்கள் நிறைந்த,
கைகளால் தயாரிக்கப்பட்ட
ஒப்பற்ற கலவையாகும்.
மெடிமிக்ஸில் குளியுங்கள்,
உங்கள் சருமம், முகப்பரு, மாசு,
வெயில், சோர்வு
போன்றவையை எதிர்க்கும்,
அதோடு காலம் காலமாய் நீடித்த
பொலிவைத் தரும்.



மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்
சருமத்தை இளமையாக
வைத்திருக்கும் என்றென்றும்

www.cholayil.com
CHOLAYIL

Baby Cheramy

සුව සිඟිති වාසනා



අගනා නිවසක් තෑගී



# நம் நாட்டின் ஆரோக்கியமுள்ள துடுக்கான குழந்தைகள் பேபி ஷெரமி தரும் சுவ சிங்கிதி அதிர்ஷ்டம் மூலம் பெறுமதி வாய்ந்த வீடு ஒன்றை வெல்லும் அரிய வாய்ப்பு...

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி செப்டம்பர் 14

செய்ய வேண்டியவை இவைதான்

- குழந்தையின் அழகிய படம்
- சுகாதாரப் பதிவேடு / நோய்த்தடுப்பு மருந்தூட்டல் பதிவேட்டின் போட்டோப் பிரதி
- பிறப்புச் சான்றிதழின் போட்டோப் பிரதி
- என்பனவற்றுடன் கீழுள்ள கூப்பனை நிரப்பி

"பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டம்", த.பெ **1870**, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும்.

பரிசுகளின் விபரம்

- மாபெரும் இறுதிப் போட்டி -

மாபெரும் பரிசு- **20** இலட்சம் பெறுமதியான அழகிய வீடு

- ஆறுதல் பரிசுகள்- சேமிப்புச் சான்றிதழ்கள் **2**வது வெற்றியாளருக்கு ரூ.500,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு **3**வது வெற்றியாளருக்கு ரூ. 300,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு **4**வது வெற்றியாளருக்கு ரூ. 250,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு **5**வது வெற்றியாளருக்கு ரூ. 200,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழுடன் சேமிப்புக் கணக்கு.

- அரை இறுதிப் போட்டி- தங்கப் பவுண்கள் **60**

## போட்டியின் விபரம்

• நாடு முழுவதிலுமிருந்து 6-18 மாதக் குழந்தைகள் போட்டியில் கலந்து கொள்ளலாம். • குழந்தைகளின் ஆரோக்கியம், மருத்துவ மதிப்பீடு, துடுக்கு என்பனவற்றை அடிப்படையாக வைத்தே குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர். • நாடு முழுவதிலுமிருந்து பெறப்பட்ட நுழைவுகளில் இருந்து, கொழும்பு, காலி, கண்டி, பதுளை, அனுராதபுரம், வவுனியா எனப் பிரிக்கப்பட்ட பிராந்திய அடிப்படையில் ஒவ்வொன்றிலிருந்தும் 100 குழந்தைகள் அவ்வப் பிராந்தியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு அரை இறுதிப் போட்டிக்காகப் பட்டியலிடப்படுவர். • 6 பிராந்தியங்களில் இருந்தும் அரை இறுதிப் போட்டியின் பின்னர் ஒவ்வொன்றிலுமிருந்தும் 10 குழந்தைகள் என 60 குழந்தைகள் இறுதிப் போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர். • முதற் சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட /தேர்ந்தெடுக்கப்படாத குழந்தைகள் கடிதம் மூலம் அறிவிக்கப்படுவர். • சட்டுட்டு உயனவில் நடைபெறும் இறுதிப் போட்டியின் போது மாபெரும் வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். இறுதிப் போட்டியின் போது தாய்களுக்கும் சேய்களுக்கும் விநோத நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய விபரங்கள் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்படும். • போட்டியின் அனைத்து மட்டங்களிலும் அரசாங்க வைத்தியர்கள் அடங்கிய குழுவினாலேயே தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

## போட்டி ஒழுங்கு விதிகள்

- நாடு முழுவதிலுமுள்ள 6-18 மாதக் குழந்தைகள் அனைத்தும் போட்டிகளில் பங்குபற்றலாம்.
- பத்திரிகைகளில் பிரசுரமாகின்ற நுழைவுக் கூப்பன்களுடன் தேவையான விபரங்கள், குழந்தையின் துடுக்கான படம் என்பனவற்றை அனுப்ப வேண்டும்.
- போட்டி நுழைவுக்கான இறுதி நாள் 14 செப்டம்பர் 2003 ஆகும்.
- ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிறைவற்) லிமிட், கிராண்ட் மெக்கன் எரிக்ஸன், ஒப்டிமம் Q ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களின் குழந்தைகள் தவிர நம் நாட்டின் அனைத்துக் குழந்தைகளும் கலந்து கொள்ளலாம்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### நுழைவுக் கூப்பன்

குழந்தையின் முழுப் பெயர் : ..........

தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர் : ..........

முகவரி : ..........

தொ.பேசி (இல்லம்) .......... (அலுவலகம்) ..........

வயது (மாதங்கள்): .......... நிறை ..........

தலையின் சுற்றளவு (நெற்றியினூடான அளவு) .......... அங்குலம் தாய்ப்பாலூட்டிய காலம் (மாதங்கள்) ..........

உங்களுக்கு அண்மையிலுள்ள பிராந்தியத்தைக் குறிப்பிடவும்.

☐ கொழும்பு ☐ கண்டி ☐ காலி ☐ அனுராதபுரம் ☐ பதுளை ☐ வவுனியா

*இந்தப் போட்டி ஒரு சீட்டிழுப்பல்ல

Baby Cheramy

பாசத்தின் இதம் தரும்

Grant McCann



# சிறந்ததோர் வாய்ப்பு

## நீங்கள் எதுவரை செல்ல விரும்புகிறீர்கள்?

கீழ்காணும் நாடுகளில் பல்கலைக்கழகம்
அல்லது கல்லூரிகளில் கல்விபெற வாய்ப்பு
2004ஆம் ஆண்டுக்கான அனுமதி.

- முதல் இரு ஆண்டுகள் ஐரோப்பிய சமூக நாடொன்றிலும் கடைசிவருடம் ஐக்கிய அமெரிக்கா/ஆஸ்திரேலியா நாடுகளிலும் நிறைவு பெறும்.
- முதல் இரு ஆண்டுகள் மலேசியாவிலும், கடைசி வருடம் ஆஸ்திரேலியா/ஐக்கிய இராச்சியம்/ஐக்கிய அமெரிக்கா நாடுகளிலும் நிறைவு பெறும்.

மற்றைய நாடுகள்: கனடா/நியூசிலாந்து/சிங்கப்பூர்/அயர்லாந்து/ஜப்பான (மொழி)

## கனடா / ஆஸ்திரேலியா / நியூசிலாந்து



ஆகிய நாடுகளில் குடியேற வாய்ப்பு
பட்டதாரி/டிப்ளோமாவுடன் கூடிய மூன்று வருட தொழில் அனுபவம்.
(ஆகக்குறைந்தது)

## நீங்கள் இப்போது தயாரா?

அப்படியானால் முதலில் உங்கள் பெயரைக் கீழ்க்காணும் விலாசத்தில்
ஒரு மாதத்திற்குள் பதிவு செய்து கொள்ளுங்கள்

யாழ்ப்பாணத்தில் : திருமதி ஏ.துரைசிங்கம்,
இலக்கம். 529, பலாலி வீதி,
(பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்- 0777 322551

காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரையும்,
பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 05.30 மணிவரையும்.

கொழும்பில்: திரு. ரீ.ரீ. பிரகலாதன் (பிரபா)
நியூசிலன்ட் அக்கடமிக் சேர்விஸஸ் கொழும்பு
(பிறைவேற்) லிமிட்டெட்,

யூனிட் 11, உஆம் மாடி, லக்கி பிளாஸா,
இலக்கம் 70, சென்ற் அன்றனீஸ் றோட், கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம்: 0777 798149(HotLine), 074-714760
ஈமெயில்:saiprabal9@hotmail.com


# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடல்

யாழ்.பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தினால் இன்று 31.08.2003 நடத்தப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களினால் எதிர்வரும் 31.10.2003இற்கு பிற்போடப்பட்டுள்ளது.

(21952) (21-19-18) – மன்றத்தினர்.

# போபீசன் எலக்றோனிக்ஸ்

அன்பான வாடிக்கையாளர்களே!

எமது நிறுவனத்தில், திருத்த வேலைகளுக்காக 01.08.2003இற்கு முன் ஒப்படைத்து இதுவரை மீளப்பெற்றுக்கொள்ளாத உங்களின் இலத்திரனியல் பொருள்களை 15.09.2003இற்கு முன் மீளப்பெற்றுக் கொள்ளவும். குறிக்கப்பட்ட தவணைக்குள் பெற்றுக்கொள்ளாத பொருள்களுக்கு நாங்கள் பொறுப்பாக இருக்க முடியாது என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
(22016)(21-19-18) மதவடி, K.K.S.றோட், சுன்னாகம்.

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 - 05 - 1981



உதிர்வு 25 - 08 - 1998

## செல்வி நாகேந்திரம் நிஷாலினி (சுகி)

(பரு/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பழைய மாணவி)

திதி:ஆவணிச் சதுர்த்தி 31-08-2003

பாசமுடன் நாம் வளர்த்த பாசச் சுகி - நீ
பாரை விட்டேகி பஞ்சாண்டாச்சுதம்மா - உன்
பாசம் குறையவில்லை பாவி எம் நெஞ்சில்
பார் உள்ளவரை பரந்து நிற்கட்டும் - உன்
பாச நினைவலைகள்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'சுகிஸ்தான' உமது பிரிவால் என்றென்றும் வாடிநிற்கும்:
அல்வாய் தெற்கு, அல்வாய். பெற்றோர், உறவினர்கள்.

(22023)(21-18-19)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவில்லும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 18 - 10 - 1919



மறைவு 01 - 08 - 2003

## அமரர் துரைக்குட்டி செல்வமணி

எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'செல்வபவனம்', புதுவீதி, – மக்கள், மருமக்கள்,
கொக்குவில் மேற்கு, பேரப்பிள்ளைகள்.
கொக்குவில். (21992)(21-19-19


# புரோட்டினெக்ஸ்®

நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகிறது.

100% தாவரப் புரதம்

கொலஸ்ரோல் அற்றது

15 விட்டமின்களும் கனியுப்புக்களும் அடங்கியது.




போஷணைகள்: புரோட்டின், விற்றமின் A, விற்றமின் C, விற்றமின் D3 விற்றமின் E, விற்றமின் K3, விற்றமின் B1, விற்றமின் B2, விற்றமின் B6, விற்றமின் B12, நயசினமைட், D-பன்தனோல், பயோட்டின் (f)போலிக்கமிலம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, கோலின், மோல்ட்.

Astron Limited., 688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel : 636741 Fax: 636173 E-mail: astron@astron.lk


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை
திருமதி ஞானகலை நவரத்தினராசா அவர்களின் அன்பு மாமனார்

## ஆறுமுகம் வேலுப்பிள்ளை

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. ஆசிரியர்கள், மாணவர்கள்,
(21962)(21-14-18) பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

# "ஊருக்கு போகவேணும்!"



முப்பது வருசமாச்சு
வெளிநாட்டில் நிண்டு;
முந்தின கதையை நினைக்க
முழுசாய் ஞாபகமில்லை!
முக்கால் ஜம்பரோட
மொட்டையாய் முடியும் வெட்டி
மூக்குக் கண்ணாடியும்,
காதுக்குக் கடுக்கனும்,
கையில செல்போனும் கொண்டு
ஊருக்குப் போக வேணும்!

சிலோனுக்குப் போனால்
சில்லறை வேணும்;
சித்தி சித்தப்பாவுக்கும்
கொடுக்க வேணும்
லண்டனிலை எண்டால்
லோனும் எடுக்கலாம்!
இருபது வயசுப் பெண்ணை
அம்மாவின் கடிதத்தில பார்த்தேன்
இங்கேயும் இரண்டு பிள்ளை......!





சீதனந் தந்தால் வாய்ச்சுப் போகும்
சீடி செற்றும், சீப்பீ சற்றும்
வாங்கிப் போட்டு சும்மா சுத்த
சுகமாய் இருக்கும்;
யாழ்ப்பாணம் எண்டா
ஜாலியாய்த் திரியலாம் ~ எதுக்கும்
ஊருக்குப் போவோம்!

~என்.பிறேமசீலன்~
கோண்டாவில் வடக்கு.

# ஏந்திழையே எண்ணிப்பார்!



கோயில் தலங் களிலே
கொடிகள்தமை யே யறுக்க
மாயப் பொடி பூசும்
மானிடத்தைப் பார்க் கலையா?

இளசுழுதல் பழசு வரை
இனவேறு பாடின்றி
களவெடுக்கும் இத் தொழிலைக்
கச்சிதமாய்ச் செய் கின்றார்.

நாள்தோறும் இத் தொழிலை
நாசூக்காய்ச் செய் பவர்கள்
மாள்வதுவும் இதனால் தான்
மானிடமே! மறக் காதே!

ஆடம் பர மாக
அடுக்காக நகை பூட்டி
தேடிவலம் வந்தால் தான்
தெய்வ அருள் கிட்டிடுமா?

பொன்னைப்பறி கொடுத்து விட்டுப்
புலம்பி அழு வதனால்
என்ன பயன் கிடைக்கும்?
ஏந்திழையே! எண்ணிப் பார்!

பொன்நகை தனை யணிந்து
பொல்லாங்கைத் தேடி டாமல்
புன்னகை தனையே பூண்டு
பூரணன் தா ளடைவாய்!

~கூத்தாடி வி.சி.
குஞ்சிதபாதம்~

# விலகலும் வேண்டுதலும்

வேளை யிதுபோது வேண்டாத பேர்வழிகள்
தோளைத் தடவித்; துதிசெய்து ~ தோழர்காள்
தொய்தலிது வேண்டாம், துயரின்றிப் போங்களென
எய்ய வருவது மேன்!

செய்சமரின் தாக்கத்தைச் சிந்தையிற் கொண்டவர்
பொய்யரசின் போக்கைப் புரிந்திலரே! ~ மெய்யுரைப்பின்
தொய்தலிது தோன்றத் துணைநின்ற தோதுகளைக்
கொய்தக்கா லெய்தவருங் கூட்டு.

~அங்குசன்

# கவிதைக் கணுக்கள்

நாள்தோறும் நலமாயிருப்பதற்கே
அவாக் கொள்கிறேன்.
முயன்றால் வெற்றியுண்டு என்கிறார்கள்.
பலருதவியுடன் நாளாந்தம்
முயன்றுதான் பார்க்கிறேன்.
வெற்றி வந்து சேரும் வழி தெரியவில்லை
பிறப்பிலிருந்தே என்வாழ்வு இருட்டில்தான்
இயற்கை யென்கிறார்கள்
செயற்கை யென்கிறார்கள்.
இதுவரை அதனைநான்
பார்த்ததே யில்லை.
மனிதர்களைக் கூடத் தெரியாது.
பழகியிருக்கிறேன்.
இனிமையான சப்தங்களைக்
கேட்டிருக்கிறேன்
சிலரென்னைக் கேலி செய்கிறார்கள்.
சிலரென்மேல் இரக்கம் கொள்கிறார்கள்
ஆம், நான் ஒளி தெரியாதவன்தான்.
குருடனென்றெனை
சிலர் கேலி செய்யும் போது
கொதித்து எழுகின்றேன்.
பார்வை இழந்தவனென்று
பாவப்படும் போது ஆதரவு தேடுகிறேன்.
நானுமோர்.... பாரினில் மகிழ்வுகளறியாத
பாவப் பிறவிதான்.

~கி.அ.தில்லைதாசன்



ப.முரளிதரன்
யாழ்ப்பாணம்.

தோல்வி... ன காரணத்தையல்ல
தோல்வியின் வலியை
அவமானத்தின் மூலத்தையல்ல
அவமானத்தின் ஆழத்தை
இழப்பிற்கான அடிப்படையையல்ல
இழப்பின் கஸ்ரத்தை
ஏமாற்றப் பட்டதன் நோக்கத்தையல்ல
ஏமாற்றத்தால் விளைத்த துன்பத்தை...!

## கண்ணீர் அஞ்சலி

திடீரென எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 23.08.2003 அன்று அமரரான

**மார்க்கண்டு இரத்தினசிங்கம்**

(தலைவர், பணிப்பாளர் சபை)

சேவைக்கெனவே தம்மை அர்ப்பணித்த செம்மல்.
கவனிப்பாரற்றுக் கைவிடப்படும் நிலையிலிருந்த
வைத்தியசாலை மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு அல்லும்,
பகலும் அயராது பணிபுரிந்த உத்தமன்.
எவரையுமே தன் சொல்லினாலும் சரி செயலினாலும் சரி
மனம் நோகச்செய்யாத பண்பாளன்

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய். (24-11-18)(22069) பணிப்பாளர்களும், பணியாளர்களும்.

## விளம்பர சேகரிப்பாளர்

தமிழ் செய்திப்பத்திரிகை ஒன்றிற்கு விளம்பரங்கள் சேகரிப்பதற்கு துடிப்புமிக்க ஆண், பெண் அலுவலர்கள் தேவை. மாதாந்தம் ரூபா 10,000/= இற்கு குறையாத வருமானம் சம்பளமாகவும் கமிஷனாகவும் பெறலாம் / பெறமுடியும். த.பெ.இல. 2129, கொழும்பு என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

## நிலுவைப்பணம் வசூலிப்போர்

பத்திரிகை நிறுவனம் ஒன்றிற்கு நிலுவைப்பணம் வசூலிப்பவர்கள் தேவை. வசூலிக்கப்படும் தொகைக்கேற்ப கமிஷனும் சம்பளமும் வழங்கப்படும். பிணைப்பணம் செலுத்தக்கூடியவர்கள் த.பெ.இல. 2129, கொழும்பு என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

## சாரதிகள்

கொழும்பு-14 இல் அமைந்திருக்கும் நிறுவனமொன்றிற்கு இரவிலும் பகலிலும் முறைமாற்று அடிப்படையில் பணிபுரிவதற்கு அனுபவமிக்க - கார், வான், ட்ரக், முச்சக்கரவண்டி சாரதிகள் தேவை.

தொலைபேசி இலக்கம் 2591952 உடனோ
அல்லது
கொழும்பு-6, பிரட்ரிக்கா வீதி, இல. 36/2இல்
உள்ள அலுவலகத்துடனோ தொடர்புகொள்ளவும்.

(24-11-18) (C/29872)


## மீள்குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சி,ஓக.31

தென்மராட்சி சங்கத்தானை கிராம அலுவலர் பிரிவில் (ஜே/302) மீளக் குடியமர்ந்த மக்களுக்கான உடனடி மீள் குடியமர்வு கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா சாவகச்சேரி வங்கிகளில் வழங்கப்பட்டுவருகிறது.

கடந்த வாரம் நுணாவில் கிழக்கு பிரிவு மக்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விநாயகர் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இவ்வாலயத்தில் சுப்பிரமணியம், சரஸ்வதி, வயிரவர் ஆகிய சுவாமிகளுக்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு பிரதிஸ்டை செய்யப்படும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் கிரியைகளை நடத்துகிறார்.

லண்டன் சிவயோகம் அறக்கட்டளை அமைப்பினதும் இந்து கலாசார அமைச்சினதும் உதவியுடன் இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. (ஓ-3-72)


## பணியாள் தேவை

இரும்புப் பொருள் விற்பனையில் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்பு:
**பகலோன் களஞ்சியம்**
334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (11-18) (22061)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அறிவித்தல்

கோண்டாவில், திருநெல்வேலி 'பம்' நிலையங்களில் இருந்தே குருநகர் தாங்கி, பிரதான தாங்கி ஆகியவற்றிற்கு நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும், கோண்டாவிலில் பொருத்தப்பட்டிருக்கும் 'பம்' பழுதடைந்துள்ளமையால் தேவையான அளவு நீரை பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றது. எனவே, நாள் தோறும் காலை, மாலை நேரங்களில் வழங்கப்படும் நீர் விநயோக நேரம் 3 மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

அத்துடன், குடிதண்ணீருக்காக வழங்கப்படும் நீரைப் பொதுமக்கள் தேவையற்ற விதத்தில் வீண் விரயம் செய்யவேண்டாமென அறிவுறுத்துகின்றேன்.

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர். (C/29876) (24-11-18)

மாநகர சபை யாழ்ப்பாணம்.

உ

## உரும்பிராய்
## கருணாகரப் பிள்ளையார் கோயில் மஹோற்சவம்

நாளை (01.09.2003) திங்கள் ந.ப. 12 மணி - கொடி ஏற்றம்.
09.09.2003 செவ்வாய் பிற்பகல் 2.00 மணி - தேர்த்திருவிழா.
10.09.2003 புதன் பிற்பகல் 2.00 மணி - தீர்த்தத்திருவிழா.
உற்சவகாலங்களில் மாலை வேளைகளில் பிரசங்க பூஷணம்..
**ந. சிவசண்முகமூர்த்தி** அவர்களின்
சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெறும்.
அடியார்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

கருணாகரப் பிள்ளையார் கோயில்,
உரும்பிராய். (22053) (25-24-11-18)

உபயகாரர்கள்.
திருப்பணிச் சபையினர்.

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சுப்பிரமணியம் நல்லதம்பி**


(நல்லராசா மாஸ்ரர்)

ஆண்டுகள் ஒன்பதும் ஆயிற்றோ அந்தோ நீர் மறைந்து
ஈண்டு உமது நினைவுடனே இங்கு நாம் வாழ்கின்றோம்
பறாளாய் ஈசுர விநாயகர் பாதம் பணிந்து வாழ்ந்த
உங்களை எங்களால் மறக்கவே முடியாது.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம். T.P.: 070 212820 மருமகன் தயா.

(C/29865) (24-11-18)

## வீர வணக்கக் கூட்டமும் அஞ்சலி நிகழ்வும்



மலர்வு
17
08
1960

உதிர்வு
22
06
2002

சுவிஸ்வாழ் தமிழ் சிறார்களின்
தமிழ் மொழி கல்வி வளர்ச்சிக்காக
அயராது உழைத்தவரும்,
தமிழீழ தேசிய தலைவரினால்
நாட்டுப்பற்றாளர் என
கௌரவிக்கப்பட்டவரும்,
கல்விப் பணியில் இருந்தபோது
திடீர் சுகயீனம் காரணமாக
கடந்த வருடம் 22.06.2002 அன்று
எம்மைவிட்டு பிரிந்தவருமான
நாட்டுப்பற்றாளர்
**மார்க்கண்டு கருணாநிதி**
அவர்களுடைய வீரவணக்கக்
கூட்டமும் அஞ்சலி நிகழ்வும்
நாளை நடைபெறுகின்றது.

காலம் - 01/09/2003 திங்கட்கிழமை
இடம் - மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்
நேரம் - காலை 10.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச்சேவை
-சுவிற்சர்லாந்து

**நாட்டுப்பற்றாளர் மார்க்கண்டு கருணாநிதி**

(யாழ். பல்கலைக்கழக பொருளியல் சிறப்புப்பட்டதாரி)

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச் சேவை பரீட்சைப் பொறுப்பாளர்-சுவிற்சர்லாந்து

(22065)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | |
| | | | சூ. வியா. புதன் வெ. ▲ |
| | | கே. | சந். |

# இந்த வார இராசி பலன்

## 31-08-2003 - 06-09-2003

### மாற்றம்:

31-08-2003இல் சித்திரை முதலாம் பாதம் கன்னி ராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் பேச்சுக்கள் சகஜமாக நடக்கும். அரசியல் வாதிகள் பழைய சங்கை ஊதுவார்கள். உலக நாடுகள் உணர்ந்தும் உணர முடியாத நிலை. சமயவாதிகளின் ஆதிக்க வலுவால் அரசியல்வாதிகள் ஒன்றும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டபடி இருக்கும். இந்தியாவில் வன்முறைகள் வெடிக்கும். அரசியல்வாதிகள் அபிப்பிராய பேதப்படுவர். மத்திய கிழக்கில் தொடர்ந்தும் அழிவுகள் தோன்ற இடமுண்டு. இந்து, அரேபியக்கடலில் அமுக்கநிலை அடிக்கடி தோன்றும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

பொருள் வரவில் தடையுண்டு. இடம்மாற மனமுண்டு. ஆனால் மாறமுடியாத நிலையுண்டு. பொதுத்தொண்டில் புகழ் வரும். தலைவருத்தம், கால் உளைவு, புதிய பொருள் வரவு உண்டு. வீடு வாகன வசதிகள் ஏற்படும். எதிர்ப்பாலாருக்கு நல்லதல்ல. நரம்பு விறைப்பு, நித்திரையின்மை கொடுக்கும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். வியாபாரிகள் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வெள்ளி.*

### இடபம்

உதயத்தைச் செவ்வாய் பார்ப்பதனால் அடிக்கடி கோபம் கொடுக்கும். அலைச்சலுண்டு. நம்பி நடந்து நஷ்டப்பட இடம் உண்டு. எண்ணிய காரியங்கள் நடக்கும். மேலதிகாரிகள் உதவுவர். வருவாய்க்கு மீறிய செலவுகள் கொடுக்கும். பொன், பொருள் வரவுகள் இருக்கும். மாமனால் உதவிகள் கிடைக்கும். மருந்துத்துறையினர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வெள்ளி.*

### மிதுனம்

அவசரத்தில் பிறருக்கு குறைகூறி வேதனை கொடுப்பீர்கள். போட்டிகள் ஏற்படும். அயலவரை நம்பமுடியாது போகவிட்டு புறம் கூறுவர். மாணவர்களுக்கு கல்வியில் போராட்டச்சூழ்நிலை தோன்றும். இசைத்துறையில் ஆதாயம் அதிகரிக்கும். தூரத்துச் செய்திகளால் மனக்கிலேசம் கொடுக்கும். செய்தித்துறையினர் அதிக இலாபம் அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.*

### கடகம்

அடிக்கடி மனமாற்றம், பொருள் வரவில் குறைவும் தாமதமும் உண்டு. வைத்தியச் செலவு அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். செய்நன்றி மறந்து போவீர்கள். தூரத்து உறவினர் வருவர். மேலதிகாரிகள் தொழில்ஸ்தானத்தில் உதவிகள் செய்து தருவர். கடன்தொல்லை வரும். சலவருத்தம், உஷ்ணபீடைகள் கொடுக்கும். அரசியல்வாதிகளின் உதவியும் உண்டு. வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.*

### சிங்கம்

கருணை பிறக்கும், அவதிகள் வரும், ஆடம்பரச்செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் மனப்போராட்டம் வரும். வசீகரத்தோற்றம், வியாபாரப்புத்தி, குடும்பத்தில் கருத்து வேற்றுமை, வாகனச்செலவு அதிகரித்தல், கால் கை உளைவு கொடுக்கும். வைத்தியத் துறையினர், வியாபாரிகள் நன்மை - பொருள் சிறப்பு அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வெள்ளி(மத்தியானம்).*

### கன்னி

குடும்பத்தில் பல ஒழுங்குகள், வீடு வாகனச்செலவுகள் அதிகரித்தல், பெற்றோருடன் மாறுபட்ட கருத்துக்கொள்ளல், சமயசாஸ்திர நாட்டம் கொள்ளல், உறவினர்கள் வருகை, தொழில் சிந்தனையால் வெற்றி வருதல் என்பன ஏற்படும். மாணவர்களின் கல்விநிலை மாறும் பலன் உண்டு. தூரத்துச்செய்திகளால் மனத்தென்பு ஏற்படல். சமயத்துறையினர், செய்தித்தொடர்பாளர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி(மத்தியானம்)*

### துலாம்

அளவறிந்து பேசுவது நன்று. பொன், பொருள்வரவு, சுகபோகவாழ்வு, வசீகரத்தன்மையால் பிறர் உதவி செய்தல், பொருள் வரவு, வீடு, வாகன சுகம், நரம்புத்தளர்ச்சி, கெற்ப இந்திரியநோய்கள், தோல்பாதிப்பு, எதிர்ப்பாலாருடன் போட்டிபோடுதல் என்பன ஏற்படும். புடைவை, செய்தித் தொடர்பு, போக்குவரத்துப்பகுதி தொடர்பானவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் ஞாயிறு, வெள்ளி*

### விருச்சிகம்

இடமாற்றங்களால் மனக்கலக்கம், நண்பர்கள் உதவிகள் செய்தல், அயலவர்கள் வீண்பழி சுமத்துதல், எதிரிகளை மடக்குதல், வயிற்றில் வருத்தம், தொண்டையில் நோவருதல், புதிய நண்பர்கள் உதவிகள் செய்து விட்டு குறை சொல்லுவர். பொருளால் வேதனை வரும். வைத்தியத்துறை, உலோக, யந்திரத்தொழில் உடையவர்கள் நன்மை அடைவர். மாணவர்களுக்கு இடமாற்றங்களும் பொருள் உதவிகளும் கிடைக்கும் பலனுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்:ஞாயிறு, வெள்ளி*

### தனுசு

பிடிவாதத்தனம், பொருளுக்காக ஓடியாடித்திரிதல், தனஸ்தானமான 9ஆம் இடத்தில் சூரியன், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிரகங்கள் நிற்பதனால் புதிய திட்டங்களால் மனநிறைவு, நண்பர்களுக்கு உதவுதல், திட்டமிட்ட செயற்பாடுகள், சளித்தொல்லை, தோல்கடி, உஷ்ண பீடைகள், பெரியவர்கள் உதவுவர். குருத்தொழில், வைத்தியர் துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரித்தல் போன்ற பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி*

### மகரம்

தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவி செய்து தருவர். இடமாற்றங்கள் ஏற்படுதல், வாய்வு, வாதம், நரம்பு சம்பந்தப்பட்ட தாக்கங்கள் உண்டு. தூரப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். சாஸ்திரவிருப்பு, தெய்வ வழிபாடுகளால் சிறப்பு, அடிக்கடி தொழில் ஸ்தானத்தில் பயப்பாடுகள் ஏற்படுதல், வீடுமனையில் செலவுகள் அதிகரித்தல். வியாபாரிகள், குருத்துறையினர் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி*

### கும்பம்

சமூகத்தில் உங்களுக்கு நல்ல வரவேற்பு உண்டு. பண வரவு தடைப்படும். சகோதரர்களுடன் வாக்குக்கலகம், வீடு வாகன வசதிகள் ஏற்படுதல். புத்திரர்களால் மனக்கலக்கம் ஏற்படுதல், மாணவர்களுக்கு கல்வி நிலை மாற்றங்கள் ஏற்படுதல், தாய்வழியினருடன் எட்ட இருத்தல் நன்று. தொழில்ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாக்குதல். உஷ்ணபீடைகள் வரும். குருத்துறையினர், சட்டத்துறையினர், அரசியல்வாதிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:திங்கள்*

### மீனம்

காலமறிந்து செயற்படுவீர்கள். திட்டமிட்டு நடப்பீர்கள் பொருள் வரவு, இனஜனக் கொண்டாட்டங்கள் நடக்கும். பிரயாணங்கள் வெற்றி தரும். நண்பர்கள் உதவி செய்வர். மாணவர்கள் கல்வியில் சிறப்பு அடைவர். வியாபாரிகளும் சிறப்பு அடைவர். சளித்தொல்லைகள், கால்வருத்தங்களால் வேதனைப்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:திங்கள்*

**மகாதேவா ஜோதிடம்**




பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகத்துக்குப் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் பாஷையூர் அபிவிருத்திச் சங்கத்தினால் அண்மையில் இரு கணனிகள் வழங்கப்பட்டன. அந்தக் கணனிகளுடன் கழக உறுப்பினர்கள் இணைந்து எடுத்துக் கொண்ட படம். (எ-10)

# சட்டவிரோத மதுபானவிற்பனை; கொடிகாமத்தில் கடைக்கு 'சீல்'

கொடிகாமம் நகர்ப் பகுதியில் அனுமதியின்றி மதுபானம் விற்றமைக்காக கடை ஒன்றை மூடி 'சீல்' வைக்க சாவகச்சேரி நீதிவான் கொடிகாமம் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்றமைக்காக கடந்த ஜூலை மாதம் நீதிமன்றினால் மேற்படி கடை தடைசெய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் குளிர்பான விற்பனைக்கென பிரதேச சபையில் அனுமதி பெற்று மேற்படி கடை மீண்டும் திறக்கப்பட்டது. இந்த கடையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்றமை கொடிகாமம் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு கடைச் சிப்பந்தி கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செயயப்பட்டார்.

இந்நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கடைச் சிப்பந்தியை கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தபோது 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் செல்ல உத்தரவிட்ட நீதிவான் கடையினை 'சீல்' வைக்கவும் உத்தரவிட்டார். (ஓ-117)

# மனித மாண்பின் மகத்துவத்தை அறிய முயற்சிக்க வேண்டும்

இன்று எங்கும் எதிலும் வன்முறைக் கலாசாரம் பரவி வருவதைக கண்டு சகலரும் முணுமுணுப்பதைக் காண்கின்றோம். இவை தொற்று நோயா? இறக்குமதிப் பொருளா? அன்றி வேறு ஒரு நாட்டால் விதைக்கப்படக் கூடியதா? இல்லவே இல்லை. எமது மண்ணில் நாம் வாழும் சூழலில் வழிகாட்டல் வழியாக விதைக்கப்பட்டதையே இன்று அறுவடை செய்கிறோம். "எதை விதைப்பீர்களோ அதையேதான் அறுவடை செய்வீகள்" "வினைவிதைப்பவன் வினை அறுப்பான், தினை விதைப்பவன் தினை அறுப்பான்" எனக் கூறும் வார்த்தைகளையே இன்று நடைமுறையில் காண்கின்றோம்.

### ஞாயிறு நற்பிரசாதம்

நாம் நல்ல தலைமைகளைத் தேடி அலைகின்றோம். இத்தலைமைகளின் வழிகாட்டலில் சொல் ஒன்று செயல் வேறாக இருப்பதை அனுபவித்ததால தான் தவறுகளையே கற்று வளர்ந்தவர்களின் வழி வன்முறையானது. எந்தச் செயலையும் பார்த்துப் பழகும் இன்றைய தலைமுறைக்கு சொல்லை விட செயலில் வழிகாட்டும் தலைவர்களை உருவாக்குவதில் யேசுபிரான் வாழ்வால் வாழ்ந்து வழிகாட்டியே சாதாரண பாமர மக்களில் பல தலைவர்களை உருவாக்கினார். இது போன்ற தலைமைத்துவம் உருவாகுவதற்கு வாழ்வும், வார்த்தையும், நம்பகத்தன்மையுடையதாய் இருந்ததால் அன்று தலைவன் வழியில் சீடர்கள் சென்றது இன்றும் நற்செய்திப் பகிர்வாகி சரித்திரம் கூறும் வார்த்தையாகியது.

வலை வீசிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து, "என்பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவராக்குவேன்" என்று இயேசு கூறினார். உடனே அவர்கள் வலைகளை விட்டு விட்டு அவரைப் பின் பற்றினார்கள். இவை தலைவன் வழி சீடராக சென்ற சீமோன், பேதுறு எனும் வழிகாட்டிகளின் வாழ்வு வரலாறானது.

தலைவன் முன்மாதிரிகளை நற்செய்தியில் மட்டுமல்ல எமது வாழ்வில் பல சந்தர்ப்பத்திலும் வழிகாட்ட கிடைக்கின்றது. குடும்பத்திலும், சமூகத்திலும் குழும வாழ்விலும் பதவி, பட்டங்களாலும் தலைமைகளை ஏற்போர் மட்டுமல்ல சாதாரண வாழ்வில ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது செயல்கள் மற்றவர்களுக்கு வழிகாடடலாய் அமைகின்றது. இதில் பார்த்துப் பழகுதல், படித்துப் பயிலுதலை விட அதிக செல்வாக்கை செலுத்துவதால் பாமர மக்களின் வாழ்வில் இறையேசுவின் வாழ்வும், வார்த்தையும் தலைவனை முன்மாதிரிகளாக்கியது. தலைவர்கள் உருவாகி, உருவாக்கியதை எம் வாழ்விலும் முன்மாதிரியாக்க, நாம் என்ன பண்பினை கொண்டு வாழ்வோமோ அதுவே சாட்சிய வாழ்வாகவும் மாற்றம் பெறும்.

**யோசப் பாலா**

தலைவன் பிரிவினையின் சின்னமல்ல, மாறாக ஒற்றுமையின் சின்னமே. தலைவன் தியாகியாக, பணியாளனாக, வன்முறையை நாடாதவனாக, பொது நலத்திற்காகவும் மக்கள் நலத்திற்காகவும் புதிய தலைமைகளை உருவாக்குவதில் முன்மாதிரியான வாழ்வில் மனிதம் மலரும், ஆன்மீகப் பண்புகளைக் கொண்டவராகவே தம் வாழ்வால் வெளிப்படுத்த வேண்டும். இதனையே இறையேசு வாழ்வு பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டது. அதனால், அவரது பாதச் சுவடுகளைப் பின்பற்றுபவர்களாக வாழ்ந்த புனிதர்களின் வாழ்வு எம் வாழ்விலும் வாழப்படும் போது மனித மாண்பின் மகத்துவம் எம் மண்ணிலும் மனங்களிலும் மலர என்றும் நல்லதையே எண்ணி நல்லதையே செய்யும் வழிகாட்டும் தலைவர்களாவோமா?

# வவுனியா, மட்டு. பிரதேசங்களின் தொலைபேசி எண்களில் மாற்றம்

கொழும்பு,ஓக.31

வவுனியா மற்றும் மட்டக்களப்பு உட்பட 15 பிரதேசங்களில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இலக்கங்களில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 5 இலக்கங்களைக் கொண்டிருந்த வவுனியாவுக்கான தொலைபேசி இலக்கங்கள் இனி மேல் 7 இலக்கங்களைக் கொண்டிருக்கும். அதாவது, ஏற்கனவே உள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு முனனால் 22 எனும் இலக்கங்களைச் சேர்க்கவேண்டும்.

உதாரணமாக, முன்னர் 23755 என இருந்த இலக்கம் தற்பொழுது 22 23755 என மாற்றப்பட்டுள்ளது. வெளியிடங்களில் இருந்து இந்த இலக்கத்துடன் தொடர்புகொள்ள வேண்டியவர்கள் முன்புபோல 024 எனும் இலக்கங்களைப் பயன்படுத்திய பின்னர் 22 23755 எனத் தொடர்புகொள்ள வேண்டும்.

இதேபோன்று மட்டக்களப்பு பிரதேச தொலைபேசி எண்களுக்கும் 22 என்ற இலக்கங்களைச் சேர்க்க வேண்டும். தொலைபேசி இலக்கங்களுக்கு முன்னால் 22 என்ற எண்களைச் சேர்க்கவேண்டிய ஏனைய பிரதேசங்கள் வருமாறு:-

அநுராதபுரம், பொலன்னறுவை, சிலாபம், கேகாலை, நீர்கொழும்பு, அவிசாவளை, மாத்தளை, நாவலப்பிட்டி, அம்பாறை, கல்முனை, பண்டாரவளை, ஹட்டன், நுவரெலியா. (ஓ-10)

### கணித, விஞ்ஞான புதிர்ப்போட்டி

தென்மராட்சி,ஓக.31

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான புதிர் போட்டி எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் 6 ஆம் திகதி பின்வரும் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம், கைதடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறவுள்ளன. (எ-117)

உ
சிவமயம்

# பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.20 மணிமுதல் 12.30 மணி வரையுள்ள சித்த யோகமும் விருச்சிக லக்கினமும் சித்திரை நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி திருவளர் செல்வி

## மயூரி

அவர்களுக்கு பூப்புப்புனித நீராட்டு விழா நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடத்த இறையருள் துணைகொண்டு நிற்பதால் அத்தருணம் எமது உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மங்களச் செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"செல்லப்பிள்ளையார் பல்பொருள் வாணிபம்",
நெல்லியடி, கரவெட்டி.
T.P. 021-2263267
0777-739410

தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி புவனேந்திரராஜா (புவனேந்தி)
பொன்கந்தையா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(C/29871) (26-23-11-18)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
காமாட்ஷிதுணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (01.09.2003) திங்கட்கிழமை மு.ப 9.15 மணிமுதல் 11.07 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரம் கூடிய சுபவேளையில்

திரு.திருமதி வைரமுத்து
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சந்திரகாசன்**
(தாசன்)
அவர்களுக்கும்



திரு.திருமதி சின்னத்துரை
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**நிஷாந்தினி**
(நிஷா)
அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு வண்ணை கலட்டி அம்மன் ஆலய மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி ஆ.க.வைரமுத்து தம்பதிகள்
56, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

திரு.திருமதி இ.சின்னத்துரை
தம்பதிகள்
(யோக வாசம்)
5,கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(22049) (25-23-11-18)

# சேவிஸ் ஸ்ரேஷன் திறப்பு விழா



நாளை (01-09-2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி தொடக்கம் 3.00மணி வரையில் வரும் சுபமுகூர்த்த வேளையில்
சாவகச்சேரி கண்டி வீதி, மடத்தடியில்

## கோபால் சேவிஸ் ஸ்ரேஷன்
## அன்
## என்ஜினியறிங் சென்ரர்

என்னும் ஸ்தாபனத்தை மங்களகரமாக தொழிலதிபர் க. திரவியம் அவர்களால் ஆரம்பித்து வைக்க நிச்சயித்துள்ளோம். அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் வருகை தந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மடத்தடி,*
*கண்டி வீதி,*
*சாவகச்சேரி.* (C/29875) (26-23-11-18)

கிருஷ்ணகோபால் பாலச்சந்திரன்
(சந்திரன் - எழுதுமட்டுவாழ்)
தொலைபேசி - 070-213307 - 0776-141323

# நல்லாசி கூறுகின்றோம்



உயர்திரு.
## கணபதிப்பிள்ளை சிவசங்கரநாதன்
அவர்கள்

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், சரசாலை இந்து மன்ற செயலாளரும், சாவகச்சேரி சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், புத்தகசாலை உரிமையாளரும், சரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள்ளி அபிவிருத்திச் சபை பாதுகாவலரும், சரசாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினரும், ஆத்மீக சேவையாளரும், கல்விச் சேவையாளருமாகிய

## கணபதிப்பிள்ளை சிவசங்கரநாதன்

அவர்கள் யாழ். மேலதிக நீதிவான் **பா.சுப்பிரமணியம்** முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு எல்லாம்வல்ல விநாயகரின் நல்லாசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*ந . இராஜேஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்.*
*சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பிரதமகுருவும்.*
*மயூரி அம்பாள் முன்பள்ளித் தலைவரும்.*

(C/29857)
(25-23-11-18)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர்
திரு.சபாபதி சின்னத்துரை
(பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்)
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சபாபதி பார்வதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்.மாவட்டச் செயலக ஊழியர்களும்,
நலன்புரிக் கழக உறுப்பினர்களும்.

(சி29853) (32-23-11-18)

# கண்ணீர் அஞ்சலி

28.08.2003 அன்று காலமான

## தம்பியையா குணபாலசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சுதுமலை.* (22032) (32-23-11-18) **சீ.கலியுகவரதன் குடும்பம்.**

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை அதிபர்,
திரு வே.அம்பலவாணேசன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா

அவர்கள் 27-08-2003 புதன்கிழமை காலமாகியதையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதோடு, துயரில் பங்கேற்று அன்னாரின் ஆத்மசாந்திக்காக கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
*செம்பியன் பற்று,*
*தாளையடி.* (22021) (32-23-11-18) யா/செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்விக்கழக நிர்வாக இயக்குநர்
திரு.செ.ஜெயபாலசிங்கம் அவர்களின் அன்பு மைத்துனியும்,
திருமதி சறோஜினி ஜெயபாலசிங்கம் அவர்களின்
அன்புச் சகோதரியுமான

## திருமதி சரஸ்வதி கணநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஞானக்குழந்தை கல்விக்கழகம்,*
*சிவன் வீதி,*
*திருநெல்வேலி.* (22063) (23-11-18)

ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# இதய அஞ்சலிகள்

யாழ்.பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும்
**திருமதி மைதிலி விசாகருபனின் அன்புத் தாயார்**
**திருமதி சரஸ்வதி கணநாதன்** (மலர்)
அவர்கள் சிவபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிநிற்கிறோம்.
- கலாசார உத்தியோகத்தர்கள்.

யாழ்ப்பாணம். (C/29856)(21-15-11)


# இசைக் கருவிகள்



சகலவிதமான இசைக்கருவிகளையும், அவற்றின் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

## சாயி சங்கீதா

UG53, பீப்பள்ஸ் பார்க், கேஸ்வேர்க் வீதி,
கொழும்பு - 11. தொலைபேசி: 2384222, 2445102
பக்ஸ்: 2445102 ஈ-மெயில்: saimusic@sltnet.lk

Talent Media - 2679475


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 08 - 10 - 1939



மறைவு 01 - 08 - 2003

(தம்பகாமம், பளை)
**சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**
(நியூ சோபிதா நகைமாடம், யாழ்ப்பாணம்)
எம் ஆத்ம நண்பனின் மறைவை நினைவுகூர்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*"ஆனந்தபதி" தம்பகாமம், பளை.* (C29797)(21-11-15) க.கிருஸ்ணபிள்ளை குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 08 - 10 - 1939



உதிர்வு 01 - 08 - 2003

அமரர்
**சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**
(பங்குதாரர், நியூசோபிதா நகைமாடம், யாழ்ப்பாணம்)

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி, கடிதங்கள் மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நேரில் வருகை தந்தும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*328, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* (C29796)(21-15-11) குடும்பத்தினர்.

## பண்ணாகத்தில் இன்று கலைவிழா

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய கலை இலக்கியப் பேரவையினர் நடத்தும் கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வித்தியாலயத்தின் கந்தையா மண்டபத்தில் அதிபர் கா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் வலிகாமம் வலயக் கணக்காளர் ந. யோகேந்திரராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக வலிகாம வலய நிதி உதவியாளர் இதவராசாவும் கலந்துகொளளவுள்ளார். (எ-28)

## வேலையாள்கள் தேவை

யானை மார்க் சோடா பெட்டிகளை இறக்கி ஏற்றுவதற்கான கூலி ஆள்கள் தேவை.
உடன்தொடர்பு கொள்ளவும்:
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(21-11-15) (21971)

## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும் மின்சார ரில்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர்கள், வெல்டிங் பிளான்ற், இவற்றிற்கான உதிரிப்பாகங்களும் வேறு வகை மின்சார சாதனங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
கி.சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சி-29776) (21-15-11)

## சாரதி தேவை

★ யாழ். - கொழும்பு சொகுசு பஸ், வான் சாரதி தேவை.
★ நடத்துநர் (கிளினர்) அனுபவம் உள்ளவர்.
★ விடுதி பராமரிப்பாளர்

நற்சான்றிதழ், சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) ஆகியவற்றுடன் 31.08.2003 ஞாயிறு பி.ப. 2.30 மணிக்கு 77, கே.கே.எஸ். வீதி, அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

*77, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.* (21979)(21-11-15) "அற்லஸ்"(A.I.C.) நிர்வாகி.

## காணி விற்பனைக்கு உண்டு

கோண்டாவில் சந்தி, இராமகிருஷ்ணா வீதியில், பலாலி வீதிக்கு 50யார் தொலைவில் 14பரப்புக் காணியும், பாம் ஸ்கூலுக்கு அண்மையில் பலாலி வீதியிலிருந்து 50யார் தொலைவில் 18 பரப்புக்காணியும், இருபாலை வீதியிலிருந்து பாற்பண்ணைக்குச் செல்லும் வீதியில் 100 யார் தொலைவில் 24 பரப்புத் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பங்கிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

**S.சுரேஸ்**
கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. 0777 064110
(21-15-11) (21997)

## தேவை

வரலாற்றுப் புகழ்மிக்க
**திருக்கேதீச்சரத் திருக்கோயிலில்**
பணியாற்றுவதற்குத் தகுதியுடைய சிவாச்சாரியர்கள், மடைப் பள்ளி பரிசாரக பூசகர்கள் தேவைப்படுகின்றனர். பணியில் சேர விருப்பமுடையவர்கள் தகைமையுடன் நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடித மூலமோ கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

1. திருக்கேதீச்சரத் திருக்கோயில், திருக்கேதீச்சரம்.
2. இல.3, இராமகிருஷ்ண அவென்யூ, கொழும்பு - 06.

தொலைபேசி எண்: 023 2233003
01 2360316
2586042
திருக்கேதீச்சரம். (21870) (26-24-11-15) - துணைச் செயலர்.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் சுபமங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் (01.09.2003) திங்கட்கிழமை காலை 10.10 மணி முதல் 11.22 மணி வரையுள்ள துலாலக்கினமும் சுவாதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

சபாரத்தினம் ஆச்சாரியார் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன்
திருவளர்செல்வன்
**சிவகுமார்**
அவர்களுக்கும்



ஜீவரட்ணம் ஆச்சாரியார் தம்பதிகளின் ஏக புதல்வி
திருவளர்செல்வி
**ஜெயவாணி**
அவர்களுக்கும்

அம்பிகை திருவருள் துணை கொண்டு **திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில்** திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி செ.சபாரத்தினம் ஆச்சாரியார் குடும்பத்தினர்.
'இரத்தினமஹால்"
தலங்காவல் பிள்ளையார் கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.(21959) (25-21-11-15)

ஜீவரட்ணம் ஆச்சாரியார் குடும்பத்தினர்.
(ஆறுமுகம் சிற்பாலயம்)
"ஜெயமஹால்" அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.


(இருவீட்டார் அழைப்பு)

உ
ஓம்
விராட் விஷ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர,
நிகழும் மங்களகரமான சுபானு வருடம், ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (01.09.2003) திங்கட்கிழமை, காலை 9.15 மணி முதல் 10.34 மணிவரை (பழைய நேரம்), சுவாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும், துலா லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

அமரர்கள்
திரு.திருமதி சந்தானராஜா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் திருநிறை செல்வன
**சந்திரராஜா**
அவர்களுக்கும்



திரு.திருமதி இரத்தினசிங்கம தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி
**நடேசினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு **"வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான (நாச்சிமார் கோயில்) கல்யாண மண்டபத்தில்"** திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்தும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பையே நேர்முக அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
※ தங்கள் நல்வரவை விரும்பும்:

சந்தனராஜா குடும்பத்தினர்
586/1, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்.

திருதிருமதி இரத்தினசிங்கம் குடும்பத்தினர்
தண்ணிரூற்று,
முள்ளியவளை.

(இருவீட்டார் அழைப்பு) (C/29826) (21-11-15)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி ரோஜிதா காசிநாதன்** (ஜனனி)

*(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

கடந்த க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றி **A,2B** சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 29ஆவது இடத்தைப் பெற்று கற்ற கல்லூரிக்கும் சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் எதிர்காலத்தில் சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்து பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

*கேணியடி,*
*ஆடியபாத வீதி, திருநெல்வேலி.*

**திருமதி சி.புஸ்பராணியும்**
**திரு. திருமதி முகுந்தன் ரஞ்சினி**
**குடும்பத்தினரும்.**

(22041)(24-15-19)

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேச சபை

சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான கொடிகாமம் சந்தைப் புறத்தில் காளிகோவில் வீதியோரமாக உள்ளும் புறமும் உள்ள 8 கடைகளின் வியாபார உரிமையைக் குத்தகைக்கு விடுவதற்கான அரக்குமுத்திரை இடப்பட்ட கேள்விகள் சாவகச்சேரி பிரதேச சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களையும், நிபந்தனைகளையும் மீளளிக்கப் படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 120/-உம் VAT உட்பட மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000/- உம் செலுத்தியதன் பேரில் சபையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை குறித்த திகதிக்கு முன்பதாக தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சந்தைக் கடைகளுக்கான கேள்விகள்" எனக் குறிப்பிட்டு "செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்னும் முகவரியிட்டு அதற்கென வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் இடுதல்வேண்டும்.

*சபையால் கேள்விப்பத்திரம் வழங்கும்*
*இறுதித் திகதி* :- 12.09.2003 பி.ப. 3.30மணிவரை
*சபைக்கு கேள்விப்பத்திரம்*
*சமர்ப்பிக்கும் இறுதித் திகதி* :- 15.09.2003 பி.ப. 2.30மணிவரை
*கேள்விகள் திறந்து பரிசீலித்தல்* :- 16.09.2003 காலை 10.00மணி
*கேள்வித் தொகையின் ஆகக்குறைந்த பெறுமதி* :- ரூபா 100,000/=

ஆகக்கூடிய கேள்விகளின் அடிப்படையிலும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் கேள்விப்பணத்தைச் செலுத்தியதன் பேரிலும் கடையைத் தெரிவுசெய்வதற்கான முன்னுரிமை வழங்கப்படும்.

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
28.08.2003. (C/29848)(24-15-19)

கு.ந.பாலச்சந்திரன்
செயலாளர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்




## திருமதி கைலாசபதி சண்முகராஜா

எமது இல்ல விளக்காக ஒளி வீசிப் பிரகாசித்த அன்னையே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் பூமுகம் என்றும் நினைவிலிருக்கும்
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் இல்லத்தரசியின் மறைவுச் செய்திகேட்டு உடனே வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும் வைத்தியசாலையில் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தபால், தந்தி, பத்திரிகைமூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிமூலம் அனுதாபந் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகள் சிறப்புற நடக்க உதவி புரிந்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அன்புள்ளங் கொண்ட அத்தனை பேருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்துகொள்வதோடு மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

187/8, கில்னர் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் வருந்தும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

-உமா ஸ்ரோர்ஸ்,
சிவன் கோயிலடி.

# உவர்நீர் தடுப்பணைப் பணி பூர்த்தி

புளியங்கூடலில் உள்ள குறுக்குக் கடல் உவர்நீர்த் தடுப்பு அணை வேலைகள் யாவும் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன.

'நியாப்' திட்டத்தின்கீழ் இப்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அப்பகுதியில் மழைநீரைத் தேக்கிவைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதேசமயம், இந்த அணையின் தெற்குப்புறத்திலுள்ள வீதியின் பள்ளமான பகுதியில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கு சிரமாக உள்ளதாகவும் - எனவே, அந்த வீதியை உயர்த்தி செப்பனிட்டுத் தருமாறும் அப்பகுதி விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன. (ஒ-49)

# புதிய கட்டடம் திறப்பு

தெல்லிப்பழை,ஓக.31

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட புதிய கட்டடம் மாணவர்கள் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டுள்ளது.

ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டடத்தின் கட்டுமானப்பணிகள் கடந்த தவணை இறுதியில் பூர்த்தியாகியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-150)

# அடிக்கல் நடும் விழா

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் வசந்த மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல்நடும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தில் வசந்த மண்டபம், யாக சாலை, கொடித்தம்பம் என்பன புதிதாக அமைக்கப்படவுள்ளன. (எ-73)

# நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஓக.31

ஈழத்துச் சோமு எழுதிய 'ஈழத் தமிழ்க்கு ஏன் இந்த வேட்கை?' நூல் அறிமுகவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி துரை.மனோகரன் கலந்துகொள்வார். (எ-10)

# விற்பனையாளர் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ள விற்பனையாளர்களும், பழக விரும்புபவர்களும் தேவைப்படுகின்றனர்.

01.09.2003 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குப் பின் நேரில் வரவும்.

விநாயகர் புடைவை அகம்
*62A, 63A, நவீன சந்தை*
*(உட்புறம்)*
(29855) *யாழ்ப்பாணம்.* (11-18)

# தேவை

**எமது நிறுவனத்திற்கு**

1. Computer Type Setting, (Printing, Corel Draw, Ms word, Page Maker) and Internet, E-mail தெரிந்த பெண்கள் உடன் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
2. தொலைபேசி நிலையத்தில் வேலை செய்ய ஆண்கள் தேவை. (பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**MODERN NET,**
*125, ஸ்ரேசன் றோட்*
*(நல்லூர் பிரதேச சபை நூல்நிலையம் முன்பாக),*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

**T.P. - 222 5652**
(24-15-19) (22052)

# Jaffna College Institute of Technology

## Vaddukoddai, Jaffna, Sri Lanka

**STUDENTS ARE WELCOME**
**to register for the following courses**

Get Open University exemptions with our Diplomas
All courses well suited for school leavers

* **Diploma Courses**
  Diploma in Computer Programming & Data Processing
  Duration: 1 Year (full time)
* **Technician Diploma Courses**
  (NDTLevel Courses)
  Electronics & Telecommunication Engineering
  Duration: 1Year (Full time)
* **Technician Certificate Courses**
  Basic Engineering
  Electronics
  Duration: 1Year (Full time)
* **Certificate Craft Courses** (தமிழ் மொழி மூலம்)
  * Mechanical Craftsman Practice
    (லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி)
  * Electrical Wiring & Installation Practice
    (மின் இணைப்பும் நிர்மாணமும்)
  * Automobile Technology
    (மோட்டார் வாகன தொழில் நுட்பம்)
  * Radio & T.V. Servicing
    (றேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
  * Foundry Practice
    (வார்ப்பு பயிற்சி)
  * Air - Conditioning & Refrigeration
    (குளிரூட்டுதல் பயிற்சி) Duration: 1 Year (full time)

**Facilities LIBRARY, HOSTEL, SPORTS**

Application forms are available at JCIT, Vaddukoddai and Undergraduate Department, Jaffna College, Hospital Road, Jaffna.

DIRECTOR
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**
E.mail: jcit@sltnet.lK Tel.No.: 070-213139

(சி-29661) (24-15-19)

உ
பிள்ளையார் துணை



# மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் சுபானு வருடம் ஆவணித் திங்கள் 15ஆம் நாள் (01-09.2003) திங்கட்கிழமை நண்பகல் 12.05 மணிமுதல் 1.35 மணிவரையுள்ள சுபவேளையில்

**கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு என்ற இடத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த எமது**

## ஆனந்தன் ரேடர்ஸ் (A.T.)

என்னும் வியாபார ஸ்தாபனத்தை பிரதான வீதி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் புதிய கட்டடத்தில் இறைவன் திருவருள் துணைகொண்டு ஆரம்பித்து நடத்தவுள்ளோம். ஆகவே, அத்தருணம் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்து ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரதான வீதி,**
**பண்டத்தரிப்பு.**

தங்கள் நல்வரவை நாடும்:
**ஆனந்தன் ரேடர்ஸ் ஸ்தாபனத்தினர்.**

☞ **எம்மிடம் அனைத்து வகையான கட்டடப்பொருள்கள், கூரை சீற் வகைகள், பெயின்ற் வகைகள், சீமெந்து வகைகள், மின்சார உபகரணங்கள், P.V.C. பைப், குழாய் வகைகள், அதன் இணைப்பு வகைகள் மற்றும் ஏனைய உதிரிப்பாக வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

(21919) (26-24-11-18)



## வெள்ளிவிழாக் காணும் தம்பதிகளை வாழ்த்துகின்றோம்

இருமனம் கலந்த திருமண வாழ்வில்
இல்லறமாம் நல்லறத்தில்
இருபத்தைந்தாம் ஆண்டின்
இனிய நிறைவுதனை காணும் இந்நாளில்
இனிய தம்பதியினர் பொன்கலன்-மற்றில்டா
இன்றுபோல் என்றும் இன்பமுடன்
பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க.

கீதபொன்கலன்-மற்றில்டா
தம்பதியினர்

இனிதுடன் வாழ்த்தும்:
தாய், பிள்ளைகள், சகோதரர்,
உறவினர்.

(22085)(13-16-29)

## அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக 3 ஆம் வருட பொருளியல்துறை மாணவர்களுக்கு கல்விச்சுற்றுலா சம்பந்தமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை (01.09.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மாணவர் பொது அறையில் இடம்பெறும் என்பதால் அனைத்து 3ஆம் வருட பொருளியல்துறை மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

-3ஆம் வருட பிரதிநிதி
(சி29887) (32-13-16-29) பொருளியல்துறை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
29 - 06 - 1952



இறப்பு
31 - 08 - 2002

### அமரர் பற்றிக்கோன்

அன்பான அப்பாவே! ஆருயிரே!
எம்மைக் கண் கலங்காது காத்து வளர்த்த மாணிக்கமே!
ஓராண்டு சென்றாலும் நாம் வாழும் காலம் வரை எம்
நினைவில் நீங்காத இடம் கொண்ட உத்தமரே!
உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

*2ஆம் குறுக்குத் வீதி,*
*பாஷையூர்,*
*யாழ்ப்பாணம்.*

-அன்பு மனைவி, பிள்ளைகள்.

(சி29884) (32-13-29)

உ

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வித்தக விநாயகர் ஆலய

## நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

### 31.08.2003

மெய்யடியார்களே,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் கல்வியறிவுக்கும் ஒழுக்க மேம்பாட்டுக்குமாக ஒரு வித்தக விநாயகர் ஆலயத்தை இலண்டன் சிவயோக இந்து அறக்கட்டளையினரின் உதவியுடனும் முடிமன்னர் வைரவர் ஆலயத்தை இந்து கலாசார அமைச்சின் உதவியுடனும் கட்டப்பெற்று ஆவணி 14 ஆம் திகதி (31.08.2003) சித்திரை நட்சத்திர சதுர்த்தி திதியில் 7.15-9.40 மணிமுதல் மகாகும்பாபிஷேக நிகழ்வு நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேக பிரதமகுரு - கிரிஜாகலாப முக்தாமணி
**சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக்குருக்கள்**
(சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி)

கட்டட நிர்மாணம் - அராலியூர் திரு.சி.மகேஸ்வரன் அவர்களும் குழுவினரும்.

திருக்கோவில் வர்ணவேலைப்பாடு - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரத்துறை மாணவர்.

இந்த கும்பாபிஷேக இறை நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு இறையருளைப் பெறுமாறு மெய்யடியார்களை வேண்டுகின்றோம்.

அறங்காவலர்கள்
(இலண்டன் சிவயோகம்
அறக்கட்டளை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரிச் சமூகத்தினர்.

விளம்பர அனுசரணையாளர்:-
*அம்பிகை களஞ்சியம்*
304 (110), மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(22071) (29-13-32)

## தேவை

- மில் வேலையில் அனுபவம் உள்ளவர். (4000/=)
- பழக விரும்புவர்.
- உதவியாளர்.

தொடர்பு:
*பிருந்தா மில்ஸ்,*
*NO:18, றக்கா றோட்*
*யாழ்ப்பாணம்.*
T.P: 5745

22088

## K.T.C ஸ்ரேசன் றோட் கோண்டாவில்

**சிங்கள வகுப்புக்கள்**

புதியபிரிவு ஆரம்பம்:
31/08/2003 (ஞாயிறு)

BY.E.S.பியதாச

சனி
ஞாயிறு } புதியநேரம்: 4.00

(C/29865) -நிர்வாகி-

## A/L Day Class

ஆரம்பம்: 01-09-2003
திங்கள் காலை 8.00

பொருளியல் - P.மோகன்
கணக்கீடு - S.S.சீலன்
வணிகக்கல்வி - S.சுஜன்

★ பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்படும். (22057) (32)

**வர்த்தகக் கல்லூரி
சாங்கானை.**

## லக்ஷ்மி சினிமா இணுவில்

31 வரை
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக நடித்த
**தமிழன்** (ரீல்ஸ்) (22039)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).
01.09 முதல்
முரளி நடித்த **காதலுடன்**

## நாகம்ஸ் சுன்னாகம்

மம்முட்டி, அபிராமி, ராதாரவி, வடிவேல் நடித்த
**கார்மேகம்**
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(31-12-18) (C29232)

## நிரஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், சிம்ரன் நடித்த
**அரசு**
தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
THE PEACE KEEPER
தினசரி 7.45 இற்கு.
(C29213) (31-12-18)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
சித்தார்த், ஜெனலியா, விவேக
**பாய்ஸ்**
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/29829)

## லிபேட்டி அச்சுவேலி

புதிய வெளியீடு
ஸ்ரீகாந்த், த்ரிஷா, வையாபுரி
**மனசெல்லாம்** (ரீல்ஸ்)
தினசரி : 11.00. 3.00. 7.00
(C29313)

## டேவ்ரக் டென்சியா கம்பைன்ட் ஹாவஸ்டர்



புத்தம் புதியது

- குறைந்த செலவு
- இலகுபாவனை
- அதிகூடிய திறன்
- வீண் விரயங்களைத் தடுக்கலாம்
- ஆறு மாத உத்தரவாதம் உண்டு

- நாளொன்றுக்கு 2 ஏக்கர் நிலப்பரப்பினை அறுவடை செய்யலாம்.
- இதில் சூடடித்தல் மற்றும் நெல்லினை சாக்கினில் இட்டுக் கட்டுதல் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்

**டேவ் டிரக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்.**
**யக்கல, தொலைபேசி : 033 222 6010**

யாழ்நகர் மைய, நல்லூர் றோட்டறக் கழகங்கள்
இணைந்து நடத்தும்

## இலவச கண் பரிசோதனை முகாம்

காலம் : இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை
காலை 08.30 மணி முதல் 4.00 மணி வரை.
இடம் : யா/பெரியபுலம் மகாவித்தியாலயம் (நாச்சிமார் கோயிலடிக்கு அருகில்)

⇨ ரூ.3,500 பெறுமதியான கண்ணாடி வில்லைகள் ரூ.750இற்கு வழங்கப்படும்.
⇨ கொழும்பிலிருந்து வருகைதந்த வைத்தியரால் கண் பரிசோதிக்கப்படும்.

மலிவு விலையில் கண்ணாடிகளை பெற்றுக் கொள்ளும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

"சமூக சேவையே எமது நோக்கம்"

நல்லூர். நகர்மைய
றோட்டறக் கழகங்கள்.

-செயற்றிட்ட தலைவர்கள்.

(C/29877) (13-16-29)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாவதி தருமலிங்கம்

யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தைச் சேர்ந்த திருமதி கமலாவதி தருமலிங்கம் அவர்கள் நேற்று (30.08.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் தருமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம், நாகராசா, இரட்ணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிரஞ்சனா, நளாயினி, வாசுகி, சியாமினி ஆகியோரின் அருமைத் தாயாரும் முருகேசு, ராஜன், விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் முரளிதரன், முகுந்தன், முகிலன், கௌசிகா, முகிந்திரன், முரளிகாந், கயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*வராளி கோயிலடி,*
*கொக்குவில்.*

(22054)

தகவல்:
நா.கங்கைஅமரன்
(மருமகன்)

## திருமதி குமாரசாமி புவனசுந்தரி

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி புவனசுந்தரி 29.08.2003 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் வயலின் வித்துவான் கலாபூஷணம் வி.கே.குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் சீவரட்ணம் - விஞ்ஞானமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் ஸ்ரீபுவனகுமார் (ஓய்வு பெற்ற விமானப்படை உத்தியோகத்தர்), திருமதி நந்தினி நிமலநாதன் (ஆசிரியை, நிலாவெளி முகமதியா வித்தியாலயம்), ஸ்ரீஇரத்தினகுமார் (வைத்திய கலாநிதி, காசில் வீதி மகளிர் மருத்துவமனை, கொழும்பு), திருமதி தேவகுமாரி ஹரன் (ஆராய்ச்சி அலுவலர், இந்து சமய கலாசார விவகார அமைச்சு), ஸ்ரீஸ்கந்தகுமார் (ஆசிரியர், நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்துக் கல்லூரி), கோகுலகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நீர்கொழும்பிலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19, முதலாம் ஒழுங்கை,*
*சென்.அன்ரனீஸ் றோட்,*
*சிலாபம் வீதி, நீர்கொழும்பு.* (26-13-32-29)

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(22086)

## இராசையா குலசிங்கம் (இரத்தினம்)

(சம்பந்தர் கடைப் பத்தர்)

அல்வாய், மாலிசந்தியைச் சேர்ந்த இராசையா குலசிங்கம் அவர்கள் நேற்று (30.08.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா-நாகம்மாவின் அன்பு மகனும் அன்னலக்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ், பாலசிங்கம், சிவலிங்கம் மற்றும் பவளம்மா, கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் வசந்தா, பாஸ்கரன், சாந்தா, தயாழினி, யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தயாபரன், சண்முகலிங்கம், இராஜகோபால், உதயபானு ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனித்தா, ஜிதுஜா, கேசவன், யுவேதினி, சுரக்ஷனா, துர்க்கா, கோபிகன், ஷோபிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வாய் தெற்கு,*
*மாலிசந்தி.*

தகவல்:
இ. தயாபரன் (தயா),
*(நாச்சிமார்கோயிலடி).*

(22074) (26-13-32-29)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

இணுவிலைச் சேர்ந்த வசந்தகுமார்-வனிதா தம்பதியினரின் செல்வப்புதல்வன் செல்வன் லதுர்ஷன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் விழாமண்டபமான Rom. Kath Pfarramt St. Josef / 4658 Daniken (So) என்னும் இடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். லதுக்குட்டியை அன்பு அப்பா, அம்மா மற்றும் இணுவிலில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாவான வரதரூபன், அத்தைமார்ான வாமதி, வாநிதி, டென்மார்க்கில் இருக்கும் அத்தை வாசுகி, மாமா குலராஜ் மச்சான்மார்களான ஸ்ரீபன் ஹெவின் மற்றும் இணுவில் மாமா மயூரன் அன்ரிமாரான அரசி, அகிலா, வித்தியா, பூட்டி அப்பம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இணுவில் கிழக்கு அண்ணமார் ஸ்ரீ கிருஸ்ணண் அருள் பெற்று சீரும் சிறப்பாக வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறார்கள்.




தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல் :
அப்பப்பா திருட்செல்வம்

(C/29867)

UTHAYAN Graphics

# தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு நேற்று மிகச் சிறப்பான வரவேற்பு

## கிளிநொச்சி நகரில் இடம்பெற்றது

கிளிநொச்சி.ஓக.31

பிரிட்டனில் நடைபெற்ற 8ஆவது தமிழர் விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காகச் சென்ற தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினருக்கு நேற்று கிளிநொச்சியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பாராட்டுவிழாவும் நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் இருந்து மாணவரமைப்பின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் வீர்களை ஊர்வலமாக கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு பாராட்டு விழா இடம்பெற்றது.

தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமை யில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் பொதுச்சுடரினை மேற்கு படைகளின கட்டளைத் தளபதியான கேணல் பானு மற்றும் சோதியா மகளிர் படையணித் தளபதி கேணல் துர்கா ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை மாலதி படையணியின் தளபதி கேணல் விதுஷா ஏற்றி வைத்தார்.

வலைப்பந்தாட்ட அணியினர் நிகழ்த்திய சாதனைகளைப் பாராட்டி காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, அரசியல்துறை துணைப் பொறுப்பாள் தங்கன் மகளிர் அரசியல துறை துணைப் பொறுப்பாளர் கீதா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவசாமி ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ம)

## மிருசுவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் -

சிறுமி சென்ற சைக்கிள் அந்தப் பகுதியில் உள்ள படையினரின் காவலரணில் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-3)

## ஆயுத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களில் கைபெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் தற்போது எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது. சில அமைச்சர்களும் இந்த ஆயுதக் கொள்வனவை கடுமையாக எதிர்த்துள்ளனர் என்றும் அமுனுகம தெரிவித்தார்.

கடற்படைக்குத்தேவையான ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சு அமெரிக்காவிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். இலங்கைக்கு ஆயுதங்களை விற்பதில் அமெரிக்கா அதிக ஆர்வம் காட்டியது. ஆனால் அரசு இஸ்ரேலுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து அது விலகிக் கொண்டுள்ளது என்றும் - அவர் மேலும் சொன்னார். (ம)

## தனித்தரப்பாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனரமைப்பு, மீள்குடியமர்வுப் பணிகளை மேற்கொள்ள, இடைக் கால நிர்வாகக்கட்டமைப்பு ஒன்றை புலிகள் முன்னர் கோரியிருந்தனர். ஆனால் இன்று முழுமையான இடைக்கால நிர்வாகசபையைக் கேட்கிறார்கள். இந்த நிலையில் பேச்சுக்களில தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்குபற்றி, தமது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது அவசியம் - என்றுள்ளது. (ம-3)

## 3 வெவ்வேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற நாவற்குழியைச் சேர்ந்த குலசேகரம் குலசீலன் (வயது-30) என்பவர் காயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-8-15-139)

## இடைக்கால நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று தயாரித்துள்ளோம். ஏற்கனவே மக்களின் அவசர புனர்நிர்மாணத்திற்காக அமைக்கப்பட்ட 'சிரான்' அதிகாரமின்றி செயலிழந்து போனது தெரிந்ததே. இந்நிலையில் நியாய பூர்வமானதும் சமாதானத்தின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் இன்றியமையாததுமான வரைவே இது என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ளும் என நம்புகிறோம்.

தற்சமயம் தயாரித்துள்ள வரைவைப்பற்றி இப்போது எதுவும் கூறமுடியாது. நாம் தயாரித்துள்ள இந்த வரைவை எமது தலைமைப்பீடத்திடம் சமர்ப்பித்து கலந்துரையாடவேண்டியிருக்கிறது. அதன் பின்பே இதையொரு ஆலோசனை வரைவாக அரசிடம் முன்வைக்கவுள்ளோம்.

அடுத்தகட்டப் பேச்சு ஆரம்பிப்பது தொடர்பாக உடனடியாக சொல்வதற்கில்லை இந்த ஆலோசனை வரைவை அரசிடம் முன்வைத்து அரசின் பதிலுக்காக நாம் காத்திருக்க வேண்டியுள்ளது - என்றார் அவர். (ம-3)








லண்டனில் வெற்றிவாகைசூடி நேற்று தாயகம் திரும்பிய தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு கிளிநொச்சி நகரில் நேற்று சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. வீரர்கள் கிளிநொச்சி நகர மைதானத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்படுவதையும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடந்த பாராட்டு விழாவில் அவர்கள் கலந்து கொண்டிருப்பதையும், அங்கு தேசியக் கொடியை கேணல் விதுஷா ஏற்றி வைப்பதையும் படங்களில் காணலாம்.


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
21 - 06 - 1951



இறைவன் அடியில்
04 - 09 - 2000

### திருமதி இராஜேஸ்வரி துரைராஜா

(சுழிபுரம் மேற்கு)

திதி: 01.09.2003

வாய்க்கு ருசியாகச் சமைத்தவளுக்கு
வாய்க்கரிசி போட்ட பாவி நான்
வாழ வழி அமைத்தவளுக்கு
வாழ்க்கைத் துணையாக அமைந்தேனே தவிர
வழித்துணையாகப் போகாத பாவி நான்!

உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

செல்லத்துரை ராசம்மா (சுவிஸ்) (தாய்),
K.V.துரைராஜா (கொழும்பு) (கணவர்),
நாகவிஜி,சதீஸ்,ராஜி (பிள்ளைகள்),
மருமக்கள்: வீரகத்தி கேந்திரராஜா,
சதீஸ் பிரிஷா, வரதராஜா சுதர்சன்,
பேரப்பிள்ளைகள்: வாகீசர், திவாகர், திவ்வியா.

L/4, தரைத்தளம்,
அரச தொடர்மாடி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு-04
T.P: 2580554

### தவறிவிட்டது

நல்லம்மா செல்வரத்தினம் என்பவருடைய பாஸ்போட், சிட்டிசன் காட், பென்சன் காட், கிரடிற்காட், டயறி போன்ற ஆவணங்கள் நேற்று யாழ் நகருக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.சன்மானம் வழங்கப்படும்.

*Mr. அற்புதச்சந்திரன்*
*111, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (22091)(16-17)


## மரண அறிவித்தல்கள்

### சைமன் மகாதேவன் தனரூபன்

அறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கலைவாணி வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவன் தனரூபன் நேற்று (30.08.2003) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மகாதேவன் (C.T.B., பொறிவாளர்)- தனரூபதி தம்பதிகளின் அன்பு மகனும் தனராஜ், தயாளினி, தர்மினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டைக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.* (22092)(16-17)

தகவல்:
கண்ணன் (மச்சான்).

### பொ.சோமசுந்தரம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

சாவகச்சேரி,மட்டுவில் தெற்கு, ஆனந்தகிரியை வசிப்பிடமாகக் கொண்ட பொ.சோமசுந்தரம் அவர்கள் நேற்று (30.08.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*45,சுவாமியார் வீதி,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.* (22090)(16-17)

தகவல்:
ச.முருகையா (பெறாமகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.